






சிறந்த கல்விக் கொள்கையைக் கொண்ட பின்லாந்து தேசம்

"சரியாக ஆரம்பித்தல்: இலங்கை பிள்ளைகளுக்கான முன் பிள்ளைப் பருவ விருத்தித் தரங்கள்

வினைதிறன்மிக்க உட்படுத்துகை வகுப்பறைச் செயற்பாட்டின் பண்புகளும். நுட்பங்களும்

முன் குழந்தைப்பருவத்தினரின் வளர்ச்சிக்கட்ட குணவியல்புகளை கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் ஒருங்கிணைத்தல்

வகுப்பறை முகாமைத்துவக் கோட்பாடுகள்

வினைத்திறன்மிகு கற்பித்தலும் சுல்மானின் ஆசிரியர்களுக்கான போதனா சார் உள்ளடக்கமும்

# கடல்

கல்வியியல் - உளவியல் - சமூகவியல் ஏடு

இதழ் - 22

தை - ஆனி - 2019

100/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல்

கல்வியியல் - உளவியல் - சமூகவியல் ஏடு

இதழ் 22

தை – ஆனி 2019

**பிரதம ஆசிரியர்**
கலாமணி பரணீதரன்

**வள அறிஞர் குழு**
அருட்திரு இராசேந்திரம் ஸ்ரலின்
கலாநிதி ஜெயலஷ்மி இராசநாயகம்
கலாநிதி த.கலாமணி
கலாநிதி பா.தனபாலன்
திரு. அ.பௌநந்தி

**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

**தொலைபேசி :** 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**இதழ் வடிவமைப்பு**
க.பரணீதரன்

**அச்சுப் பதிப்பு**
பரணீ அச்சகம்
நெல்லியடி

**அட்டைப்படம்**
நன்றி இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாடு தனக்கென உருவாக்கிக் கொள்ளும் கல்விக் கொள்கையே அந் நாட்டின் கல்வித்தரத்தையும், ஒழுக்கத்தை யும், வேலைவாய்ப்பையும், வேலையின் தரத்தையும், சமூகமேம்பாட்டையும் நிர்ணயிக் கின்றது. அந்த வகையில் கல்விக் கொள்கை யானது கல்வி, தொழில், சமூகம் சார்ந்த பல பிரச்சினைகளை முன்கூட்டியே தடுப்பதற்கும் உதவுகின்றது. அத்தோடு கற்றல் பிரச்சினைகளை இலகுவாகத் தீர்ப்பதற்கும் உதவுகின்றது. கல்வியானது ஏட்டுச் சுரைக்காயாக விளங்குவ தாகவே இந்திய மற்றும் இலங்கை போன்ற நாடுகளின் மாணவர்கள் கருது கின்றனர். வேலைவாய்ப்பின்மை அதன் சுட்டியாக அமை கின்றது. சமூகத்தினரிடையேயும் அத்தகைய கருத்தையே அவதானிக்க முடி கின்றது. பல்கலைக்கழகக் கல்விக்குத் தகுதி பெற்ற ஒரு இலட்சம் மாணவர்கள் அதற்கு விண்ணப் பிக்காமை ஏட்டுச்சுரைக்காய் நிலையை மாற்றுங்கள் என்ற செய்தியையே விடுகின்றது.

நவீன கல்வியானது மாணவர்கள் அறிவைப்பெறுவதோடு மட்டும் மட்டுப்படுத் தாது, வாழ்வுக்குத் தேவையான திறன்களைக் கற்றுக்கொள்வதையும் வலியுறுத்துகின்றது. இதனால் கல்வியானது பின்வரும் பல அம்சங் களை உள்வாங்கி வளர்ச்சி காணவேண்டும்: தகவலைத் தேடிப்பெறுதல், பெற்ற தகவலை திறனாய்வு செய்து தொகுத்து நோக்குதல், வாழ்வியல் சூழலுக்குப் பொருத்தப்பாடடை தல், பிறரோடு ஒத்துழைத்துச் செயற்படுதல், பிரச்சினை தீர்த்தல், புத்தாக்கத்திறனில் விருத்தியடைதல், பொருத்தமாகத் தீர்மானம் எடுத்தல், பொறுப்பேற்றுச் செயற்படல், சிறந்த ஒழுக்கம் பேணுதல், சமூகப் பங்களிப்பும் செய்கின்ற பிரஜையாக வாழ்தல், கற்றல் திறன்கள், தொடர்பாடல் திறன்கள், உற வாடல் திறன்கள்... போன்ற பல வாழ்வியல் சார் விடயங்களை உள்ளடக்கப்பட வேண்டும்.

உலகில் கல்வித்துறையில் முன்னணி வகிப்பதில் மேற்கு நாடுகளில் பின்லாந்தும் டென்மார்க்கும் கிழக்கில் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, சிங்கப்பூர், தென்கொரியா, யப்பான் என்பனவும் முன்னிடம் பெறுகின்றன. இந்நாடுகளின் கல்விக்கொள்கையும் கல்வி முறையும் ஏனைய நாடுகளுக்கு முன்மாதிரி யாக விளங்குகின்றன. இந்நாடு களின் கல்வி முறைகளை நம் நாட்டவரும் கற்றுக் கடைப் பிடிப்பின் நமது நாடும் கல்வி யில் மாத்திர மல்ல, ஆளுமைப் பண்புகளிலும் மேலோங்கு வர். அமெரிக்க கல்வியலாளர் கள் பின்லாந்து சென்று அங்குள்ள கல்வி முறையைக் கேட்டறிந்தும் அவதானித்தும் தமது நாட்டில் அறிமுகம் செய்து வருகின்றனர். கடந்த நாற் பது ஆண்டுகளில் பின்லாந்து கல்வித்துறை யில் உலகின் முன்னோடி நாடாக விளங்கு கின்றது. இங்குள்ள கல்வி வெற்றிக்கான காரணிகளாக விளங்குபவை, ஒத்த வயதினை யுடைய அனைவருக்கும் ஒரே விதமான கல்வி யும், சிறந்த ஆசிரியர்களும் கல்வி நிறுவனத் திற்கும் வழங்கப்படும் சுயாதீனமுமாகும்.

**அ. கல்வி பற்றிய நோக்கு**

1. கல்விக்கொள்கை: பின்லாந்தில் கல்வியின் தரம் பேணல், அனைவரும் சம மானவர்கள் என்ற கொள்கை கல்வி முறை யில் கடைப்பிடிக்கப்படும் முக்கிய கொள்கை களாக விளங்குகின்றன. காசுக் காகக் கல்வி யென்ற தரமற்ற சிந்தனைகள் இவர்களது மனதில் எழுவதே கிடையாது. எவரையும் பாகுபாடுகாட்டி இம்சைக்குள்ளாக் கும் நிலையும் இங்கு இல்லை. வேறு பண்பாடு களிலிருந்து வரும் மாணவர்களையும் இங்கு சமமாகவே நடாத்துகின்றனர். சமத்துவ மானது கடைப்பிடித்துப் பேணப்படும் ஒரு யதார்த்தமாக விளங்குவதால் மாணவர் மனதில் சமத்துவ சிந்தனை இயல்பாகவே உருவாகி விடுகின்றது. இந்நாட்டுக் கல்வி முறையானது மாணவர்களை நிஜ உலகை எதிர் கொள்ளத் தயார்செய்கின்றது. பின் லாந்தில் கல்விக்கான செலவை அரசே ஏற்று அளிக்கின்றது. மாணவர்களிடம் அறிவை நெருக்கித் திணிப்பதைவிடுத்து அவர்கள் முழுமையான விருத்தியடைவதை நோக்க மாகக் கொண்டு கல்வி இயங்கின்றது.

# சிறந்த கல்விக் கொள்கையைக் கொண்ட பின்லாந்து தேசம்

அருள்திரு இராசேந்திரம் ஸ்ரலின்
இயக்குநர் - அகவொளி உளவள ஆற்றுப்படுத்தல் நிலையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. கல்வியில் முன்னுரிமைப் படுத்தப் படும் விடயங்கள்: இந் நாட்டின் கல்விக் கொள்கையானது மிகமுக்கிய அடிப்படையான விடயங்களாகப் பின்வரும் விடயங்களை முன்னுரிமைப்படுத்துகின்றது.

- கல்வியானது சமூக சமத்துவத்தை ஏற்படுத்தும் கருவியாக விளங்குதல்
- உள ஆற்றுப்படுத்தல்
- தனிநபருக்கென அமைக்கப்படும் வழிகாட்டல் (Individualized guidance)
- அனைத்து மாணவர்களுக்கும் இலவச உணவு
- இலகுபடுத்தப்பட்ட வைத்திய சேவை

3. புதிய கல்வி முறைமை: பின்லாந்தின் புதிய கல்வித்திட்டம் பின்வரும் கல்வி முறையினைக் கொண்டுள்ளது.

- பாலகர்களுக்கான (for babies and toddlers) ஒருவருடக் கல்வி
- முன்பள்ளிக்கான ஒரு வருடக்கல்வி ("pre-school" or kindergarten for six-year-olds).
- ஏழுவயதிலிருந்து பதினாறு வயது வரையான ஒன்பது வருடக் கட்டாயக் கல்வி
- உயர்கல்வி பல்கலைக்கழகம் மற்றும் பிரயோக விஞ்ஞானப் பல்கலைக்கழகம். (University and University of applied sciences)
- வளர்ந்தோருக்கான தொடர்கல்வி.

ஒன்பது வருடங்களின் பின்னர் மாணவர்கள் தாம் ஒரு பல்கலைக்கழகத்தில் இணைவர் அல்லது பிரயோக விஞ்ஞானப் பல்கலைக்கழகத்தில் இணைந்து தொழில் கல்வி மேற்கொண்டு தொழில் துறைக்குள் நுழைவர். இந்நாட்டில் 17 பல்கலைக் கழகங்களும் 27 பிரயோக விஞ்ஞானப் பல்கலைக் கழகங்களும் உண்டு.

### ஆ. ஆசிரியர்களின் நிலையும் பயிற்சியும்

1. ஆசிரியர் பணிக்கான சமூக அந்தஸ்து: ஆசிரியப் பணியானது உயர்வான ஒரு தொழிலாகவே பின்லாந்து சமூகத்தவரால் மதிக்கப்படுகின்றது. இதனால் அவர்களுக்கான வேதனமானது உடற்குணமாக்குநர்கள் (வைத்தியர்கள்). சட்டத்தரணிகளது வேதனத்தை ஒத்ததாகவே விளங்குகின்றது. ஆசிரியர்கள் மேலதிக நேரமெடுத்துப் பணியாற்றின் அல்லது விசேட நெறிகளைக் கற்றுக்கொடுப்பின் அதற்கு விசேடமாக வேதனம் வழங்கப்படுகின்றது. மேலும், வருடத்தின் இறுதியில் சிறந்த பெறுபேறுகளைக் காண்பிக்கும் ஆசிரியர்களுக்குப் பாடசாலை அதிபர் விசேட கொடுப்பனவுகள் வழங்குவதற்கு, நிர்வாகத்திற்குப் பரிந்துரைப்பார்.

மேலும் ஆசிரியர்களுக்கென ஒதுக்கப்பட்ட பொது அறை உண்டு. இங்கே இவர்கள் ஓய்ந்திருக்கவும், பாடங்களை ஆயத்தம் செய்யவும், மகிழ்வூட்டும் செயற்பாடுகளில் ஈடுபடவும் வாய்ப்புக் கிடைக்கின்றது. அல்லது ஏனைய ஆசிரியர்களோடு பேசி மகிழவும் வாய்ப்புக் கிடைக்கின்றது.

2. கற்பிக்கும் ஆசிரியர்களின் கல்வித் தகைமை: ஆசிரியர்கள் எவராக இருப்பினும் அவர்கள் முதுமாணி நிலைக் கல்வியும் பயிற்சியும் பெற்றவர்களாக விளங்கு கின்றனர்.

3. ஆசிரியர் பயிற்சிப் பாடநெறியின் உள்ளீடுகள்: ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு விண்ணப்பிப்போர் பலராயினும் உள்வாங்கப் படுவோர் மிகக் குறைந்த தொகையினர் மாத்திரமே. இவர்களது எண்ணிக்கையைவிட அவர்களது தரத்திற்கே முன்னுரிமை வழங்கப்படுகின்றது. ஆசிரியர்களுக்கான பயிற்சியும் தரமானதாகவும் மிகவும் கடினமானதாகவும் இருக்கின்றது. விண்ணப்பிப்போர் தொகை யாக இருப்பினும் அனைவரும் பயிற்சிக்கு உள்வாங்கப்படுவதில்லை. ஏனெனில், மாணவ உருவாக்கத் திற்கு குறைந்த எண்ணிக்கையான தரம்மிக்க ஆசிரியர்களே வேண்டப்படுவது என்ற அடிப்படை கருத்து இங்கு உண்டு. அத்தோடு ஆசிரியர்கள் தரமானவர்களாக இருந்தால் மாத்திரமே அவர்கள் நெறிப்படுத்தும் மாணவர்களும் சிறந்த தரமானவர்களாக விளங்குவர்.

சிறந்த தரமான ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் உண்டு. இவர்களுக்கான பயிற்சி பின்வரும் அம்சங்களைக் கொண்டுள்ளது.

- தொடர்பாடல் திறன்கள்
- உறவாடல் திறன்கள்
- கற்பித்தல் திறன்கள்
- கற்றலுக்கான ஊக்கியை உருவாக்குதல்
- கற்றல் திறன்களைக் கற்றுக்கொடுத்தல்
- முன்பள்ளி மாணவர்களின் கற்றல் நலமின்மைகளை அடையாளம் காணும் திறன்.

### இ. கல்விச்செயற்பாடுகள்

1. பாடசாலை அமைவிடம்: ஒவ்வொரு கிராமத்தையும் அண்டியே பாடசாலை வலைப் பின்னல் அமைந்துள்ளது. இதனால் மாணவர் கள் பாடசாலைக்குப் பயணம் செய்வது இலகுவாகின்றது. கிராமப்புறப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகள் ஒவ்வொன்றுக்கும் அனைத்து வசதிகளும், ஆளணியும் வழங்கப்படுகின்றது. நகர்ப்புறப் பாடசாலை, கிராமப்புறப் பாடசாலைகள் அனைத்திற்கும் ஒரே வசதிகள் அளிக்கப்படுவதால் நகர்ப்புறப் பாடசாலையை நாடிச் செல்லும் தேவை இங்கு இருப்பதில்லை. பாடசாலையானது கிராமத்திற்குத் தூர இருப்பின் அங்கு அரச இலவச போக்குவரத்துச் சேவை வழங்கப்படுகின்றது.

2. பாடசாலை நேரம்: விஞ்ஞான ரீதியான ஆய்வின்போது, அதிகாலையில் பாடசாலையை ஆரம்பிப்பது மாணவர்களின் நலனுக்கும் முதிர்ச்சிக்கும் பாதகமானது என்பது கண்டறியப்பட்டது. இதனால் பாடசாலைகள் அனைத்தும் காலை 9.00 மணிக்கும் 9.30க்குமிடையே ஆரம்பமாகி மதியம் 2.00 மணிக்கும் 2.45க்குமிடையே முடிவடையும். நீண்ட பாடநேரமும் நீண்ட நேர இடைவேளைகளும் கொண்டதாகப் பாடநேரங்கள் அமைகின்றன. ஒவ்வொரு பாடங்களுக்கிடையேயும் 15 தொடக்கம் 20 நிமிடங்கள் வரையான இடை வேளை உண்டு. இதனால் இவர்கள் பல தடவைகள் உணவருந்துவதற்கும் பொழுதுபோக்குகளில் மகிழ்ந்து ஈடுபடவும், முழுமையாக ஓய்ந்திருக்கவும் இவர்களுக்கு நேரம் கிடைக்கின்றது. உடல் அலுப்பைத் தீர்த்து உடலை நீட்டி அசைத்து மகிழவும், புதிய காற்றை வாங்கி உளநெருக்கீட்டை நீக்கிப் புதுப்பிக்கப்படவும் இவ்விடைவேளை உதவுகின்றது. அந்த வகையில் இவர்கள் உளநெருக்கீடு குறைந்து மகிழ்வான செயற்பாடுகளில் ஈடுபட்டுப் புத்துணர்வோடு கற்க வாய்ப்புக் கிடைக்கின்றது. இவற்றை நோக்கின் இவர்களது கல்வியானது மகிழ்வோடு கற்றல் என்ற தத்துவத்தைப் பின்னணியாகக் கொண்டு இயங்குகின்றது.

4. வகுப்பறைச் செயற்பாடு: மாணவர்களுக்கான வகுப்புகள் கிழமையில் இருபது மணித்தியாலங்கள் மட்டுமே இடம்பெறும். அதாவது ஒரு நாளில் நான்கு மணித்தியாலங்களே கற்பித்தல் இடம்பெறும். இவர்களது கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் தொழில் நுட்பம் அதிகம் பயன்படுத்தப்படுகின்றது. ஏனைய நேரங்களில் ஆசிரியர் பாடங்களை ஆயத்தம் செய்தல், மாணவர்களைத் தனித் தனியே சந்தித்தல், பெற்றோரைச் சந்தித்தல் என்பவற்றிற்குப் பயன்படுத்துவர். வீட்டு வேலையென்று பெரிதாக எதுவும் கொடுக்கப்படுவதில்லை. எதுவும் கொடுக்கப் படின் அது 30 நிமிடங்களுக்குள் செய்து முடிக்கக் கூடியதாகவே அமையும். அந்த வகையில் இவர்களது கல்வி உள நெருக் கீட்டை உருவாக்குவதில்லை. இவர்களது கல்வியை நோக்கும்போது மனிதாயக் கற்றல் கொள்கையின் அடிப்படையில் இயங்குவ தாகத் தோன்றுகின்றது. ஏனெனில் வகுப் பறையில் இசை கற்பதற்கான பகுதி, இயற்கை பற்றி அறிவதற்கான வாய்ப்பு அளிக்கப்படுவ தோடு நவீன கற்றல் தொழில் நுட்பங் களைக் கற்பதற்கான வாய்ப்பும் வழங்கப்படுகின்றது.

5. மாணவர் நெறிப்படுத்தப்படும் முறை: முதல் ஆறுவருடங்களும் ஒரேயொரு ஆசிரியரே மாணவர்களை நெறிப்படுத்துவார். இதனால் மாணவர்களை ஒரு ஆசிரியர் இன்னொரு ஆசிரியரிடம் ஒப்படைக்கும் முறை இங்கு இல்லை. இக்காலப்பகுதியில் ஆசிரியர் மாணவரது வழிகாட்டியாகவும் மாணவரது குடும்பத்தின் ஒரு அங்கத்தவராகவும் விளங்குவர். இவ்வருடங்களில் ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையே பரஸ்பர நம்பிக்கையும் உறவுறுதியும் கட்டியெழுப்பப்படுகின்றது. இதனால் இருசாராரும் ஒருவரையொருவர் அறிந்தோராக விளங்குகின்றனர். அத்தோடு ஒரே ஆசிரியரே மாணவர்களது திறமைகளையும் தேவைகளையும் விபரமாக அறியும் வாய்ப்பு அதிகரிப்பதால் அவர்களின் வளர்ச்சியைத் தொடர்ந்து அவதானிப்பதும் அவர்கள் விரும்பும் இலட்சியம் நோக்கி நெறிப் படுத்துவதும் இலகுவாகின்றது. மாணவர்கள் தமது மதிப்பெண்கள் பற்றியோ வேலைப்பளு பற்றியோ கவலைப்படும் சந்தர்ப்பம் இல்லையாதலால் முக்கிய விடயங்களான கற்றலிலும், மனிதம் கொண்ட ஆளாக வளர்வதிலும் கவனம் செலுத்தமுடிகின்றது. மாணவர்களின் இடைவிலகல் என்பது துளியும் கிடையாத ஒரு நாடாக விளங்குகின்றது.

6. பரீட்சை முறைமை: ஏனைய நாடுகளிலுள்ள பரீட்சை முறைகள் எதுவும் இங்கு இடம்பெறுவதில்லை. தரநிர்ணயமான எந்தப் பரீட்சைகளும் இங்கு கிடையாது. ஒன்பது வருடக் கல்வியின் பின்னர் தேசிய மெற்றிக் குலேசன் பரீட்சை மாத்திரம் இடம்பெறும். இதையும் விரும்பியோர் மாத்திரம் செய்யலாம் என்ற தெரிவு உண்டு. ஒவ்வொரு மாணவனுக்குமெனத் தனித்துவமான அளவீடு அவருக்குரிய ஆசிரியரால் பிரயோகிக்கப் படும். அனைவருக்கும் ஒரே அளவீடு என்ற பொதுவான ஒரு முறை இங்கு இல்லை. ஒவ்வொரு மாணவரதும் முன்னேற்றத்தை கல்வி அமைச்சு தொடர்ச்சியாகப் பெற்றுக் கோவைப்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஈ. மாணவர் நலச் செயற்பாடுகள்**

*1. உளவியல் தலையீடுகள்:* உடல்நலப் பிரச்சினை, உளநலப் பிரச்சினை, உணர்ச்சிப் பிரச்சினைகள், நடத்தைப் பிரச்சினை என்பன முன்பருவத்திலேயே அடையாளம் காணப் பட்டுத் தகுந்த நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றது. இது முதல் தலையீடு (First intervention) எனப்படுகின்றது.

*2. கற்றல் இடர்களில் தலையீடு:* மாணவர்களது கற்றல்சார்ந்த மனதை ஒரு முகப்படுத்தல், வாசித்தல், ஒழுங்கற்ற வரவு, புலன்சார் விடயங்கள் போன்றவற்றில் ஏற் படும் பிரச்சினைகள் பற்றி உள ஆற்றுப் படுத்தல் அளிக்கப்படும். இப்பிரச்சினைகள் இடம்பெறும் போது பாடத்திற்கான ஆசிரியர் விசேட தேவை ஆசிரியரை வகுப்பிற்கு அழைப்பார். அவர் குறித்த மாணவரை இரண்டு அல்லது மூன்று மணித்தியாலங்கள் அவதானிப்பார். பின்னர் இன்னொரு அறைக்கு அழைத்துச்சென்று அவருடைய பிரச்சினையை மதிப்பிடுவார். பின்னர் பொருத்தமான தலையீடு இடம்பெறும். கற்றல் குறைபாடுகள், பல்பாண்டு பொருத்தப் பாட்டுப் பிரச்சினைகள் என்பன இவ்வாறு கையாளப் படுகின்றன.

*3. வகுப்பிற்குள்ளேயான விசேட கல்வி:* மாணவர்களின் கல்வி அடைவை மேம்படுத்து வதற்காக மேலதிக கற்பித்தல் தேவைப்படு வோருக்கு விசேட வகுப்புகள் நடாத்தப்படும். இவ்விசேட வகுப்பு நடாத்தப்படுவதாலும், ஆசிரியர்கள் முதுமாணிப் பட்டம் பெற்றவர் களாகவும் விளங்குவதால், இவர்கள் வேறு எங்கும் ரியூசன் வகுப்புகளுக்குச் செல்ல வேண்டிய தேவை கிடையாது. இதனால் அங்கு ரீயூற்றறிகளும் கிடையாது.

*4. விசேட தேவையுடைய மாணவரில் அக்கறை:* விசேட தேவை உள்ள மாணவர் கள் பெறுமதியானவர்களாக நடாத்தப்படு கின்றனர். இத்தகையோர் முன்பள்ளி யிலேயே அடையாளம் காணப்படுகின்றனர். இவர்களுக்கான விசேட பாடசாலையிலேயே இவர்களுக்குத் தனியான கற்பித்தல் இடம் பெறுகின்றது. ஏனைய நலமான மாணவர் களோடு இணைத்து வைத்துக் கற்பிக்கும் முறை இங்கு இடம்பெறுவதில்லை.

*5. மாணவர் பற்றிய தீர்மானம் எடுக்கும் முறை:* ஒவ்வொரு பாடசாலையிலும் கிழமைக்கொரு தடவை ஆசிரியர், உளவிய லாளர் போன்றோர் கலந்துரையாடியே மாண வரது எந்தப் பிரச்சினை பற்றியும் முக்கிய தீர்மானங்களை எடுப்பார்.

*6. நலன்புரிக்குழு:* இது பின்லாந்தின் அனைத்துத் பாடசாலைகளிலும் இயங்கு கின்றது. இக்குழுவானது அதிபர், மாணவ உள ஆற்றுப்படுத்துநர், வகுப்பாசிரியர், விசேட தேவை ஆசிரியர், தாதி, சமூக சேவை யாளர் ஆகியோரை உள்ளடக்கு கின்றது. மாதத்தில் இரு தடவைகள் இவர் கள் அனை வரும் ஒன்றாகச் சந்தித்து மாணவர்களின் முன்னேற்றம் பற்றிக் கலந்துரையாடுவர். பிரச்சினையுள்ள மாணவர்கள்பற்றி உரிய ஆசிரியர் இக்குழுவிற்கு அறிவிப்பர். தொடர் பான குழுக்கள் அவர்களுக்கு வேண்டிய தலையீட்டினை மேற்கொள்ளும்.

**முடிவுரை:**

இலங்கையின் பல அவலங்களுக்குக் கல்விக்கொள்கையின் குறைபாடுகளும் ஆசிரியர் பயிற்சியின் தரமின்மைகளும், அர்ப்பணமற்ற கற்பிப்போரும், காசு கறக்கும் ரியூட்டறி ஆசிரியர்களும் தலையிட்டுக் கெடுக்கும் அரசியல் வாதிகளும், அரசியல் வாதிகளின் காலடியில் விழுந்து பதவிப்பிச்சை கேட்கும் தரங்கெட்ட கல்விமான்களும், கற்க விரும்பாதுநவீன தொடர்பாடல் சாதனங் களில் மூழ்கும் மாணவர்களும், பரீட்சை மையச் சிந்தனை கொண்ட பெற்றோரும், ஆசிரியர்களுக்கு தங்குமிட வசதிகளைச் செய்து கொடுக்காது, அலைக்கழிய வைக்கும் கல்வி அதிகாரிகளும், மற்றும் ஏனைய பலவும் காரணிகளாக விளங்குகின்றன. அறிவைத் திணித்துப் பரீட்சையில் நல்ல பெறுபேறு களைப் பெற்றுக்கொள்வதே கல்வியின் நோக்கமாகத் தற்போது விளங்குகின்றது. இதனால் மனிதப் பண்பு உருவாக்கும், சமூக நலச் செயற்பாடுகளில் ஈடுபாடு, புத்தாக்கத் திறன் வளர்ச்சி என்பன குன்றிய நிலை யிலேயே மாணவர்கள் உருவாக்கப்படு கின்றனர். அதிகாலைவேளை பரக்கப்பரக்க மாணவர்களும் ஆசிரியர்களும் பாடசாலை நோக்கி ஓடுகின்றனர். உளநெருக்கீடு எப்படித் தான் அற்றுப்போகும்? உளநெருக்கீட்டால் உறவுகளில் நெருக்கடி எப்படித் தணியும்? மாணவர்கள் உண்பதற்கே நேரம் கொடுக் காத கல்விமான்கள் எவ்வாறு மாணவ உரு வாக்குநர்களாக விளங்க முடியும். மகிழ் வோடு கற்றலை நடைமுறைப்படுத்துவதற்கு மகிழ்வான ஆசிரிய சமூகம் உருவாக்கப்பட வேண்டும். பின்லாந்தின் கல்வி அணுகு முறை நம் கல்வித்துறையினருக்கு ஒரு வழிகாட்டியாக அமையட்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அறிமுகம்**

மனிதனின் வாழ்நாளில் அவனது ஆரம்பக் காலகட்டங்கள். முக்கியமானவையாகத் திகழ்கின்றன. ஏனெனில் பிள்ளையின் உணர்வு விருத்தி, சமூகவிருத்தி, உடல் விருத்தி என்பன அதன் முழுவிருத்தியில் தாக்கத்தினைச் செலுத்துகின்றது. மேலும் இது அவர்கள் பெரியவர் களாக வளர்ந்த பின்னரும் தாக்கத்தினைச் செலுத்துவதாக பல்வேறு ஆய்வுகள் குறிபிடுகின்றன. இதனாலேயே மிக இளம்பிள்ளைகளைப் பற்றிப் புரிந்து கொண்டு அவர்களின் நலன்களுக்காக முதலீடு செய்தல் எதிர்காலத்திற்கு பயனுடையதாக அமையும். மேலும் பிள்ளையின் விருத்திக்கு விளையாட்டு மிக முக்கியமானதாக அமைவதாக நரம்பியல் ஆய்வுகளின் ஊடாக கண்டறியப் பட்டுள்ளன.

இதனாலேதான் உலகிலுள்ள பெரும்பாலான நாடுகள் இளம்பிள்ளைகளின் விருத்திக்கு முக்கிய கவனம் செலுத்துகின்றன. இலங்கையில் சிறுவர் செயலகம் முன்பிள்ளைப்பருவத் தரங்களை அறிமுகம் செய்துள்ளது. இலங்கையில் முன்பள்ளிப் பருவப் பிள்ளைகளின் தரங்களை அறிதற்காக உருவாக்கப்பட்ட ஆவணத்தினை இக்கட்டுரை விளக்குகின்றது. பிள்ளைகளின் தரங்களை அறிந்து கொள்வதற்காக இதனைப் பயன்படுத்த முடியும்.

**விருத்தித் தரங்கள்**

ஒரு குறித்த வயதில் பிள்ளை அறிந்திருக்க வேண்டியவற்றையும் செய்யக்கூடியவற்றையும் முன் பிள்ளைப்பருவ விருத்தித் தரங்கள் குறிப்பிடுகின்றன. இத்தரங்கள் பிள்ளைகள் கற்பதற்கும் விருத்தியடை வதற்கும் அவசியமான சூழலை வழங்குவதற்கு பெற்றாருக்கு வழி காட்டுகின்றன. அது பாடவிதான அபிவிருத்தியிலும் அமுலாக்குதலிலும் உள்ள பாடவிதான அபிவிருத்தி யாளர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பராமரிப்பாளர்களுக்கும் வளமூட்டுகிறது.

**பின்னணி**

இலங்கைப் பிள்ளைகளுக்கான முன் பிள்ளைப்பருவ விருத்தித் தரங்களை விருத்தி செய்வதற்கான செயற்றிட்டத்திற்கு UNICEF நிதி வழங்கியது. முன்னர் சிறுவர் விருத்தியும் மகளிர் வலுவூட்டலும் என்றழைக்கப்பட்ட சிறுவர் விருத்தியும் மகளிர் அலுவல்களும் அமைச்சின் சிறுவர் செயலகம் மூன்றில் இருந்து ஐந்து வரையிலான இலங்கை பிள்ளைகளுக்கான முன் பிள்ளைப்பருவ விருத்தித் தரங்களைத் தயாரித்தல், வலிதாக்குதல், அமுலாக்குதல் ஆகியவற்றின் பொறுப்பை ஏற்றுக் கொண்டதோடு சுகாதாரமும் போசுஷாக்கும் அமைச்சின் குடும்ப சுகாதார பணியகம் பிறப்பில் இருந்து மூன்று வயது பிள்ளைகளுக்கான அதே பணியை ஏற்றுக் கொண்டது. சிறுவர் செயலகம் இலங்கை பிள்ளைகளுக்காக முன்மொழியப்பட்டுள்ள முன் பிள்ளைப்பருவ விருத்தித் தரங்களின் விருத்தியை இணைப்பாக்கஞ் செய்தது. இது முன் பிள்ளைப்பருவ பராமரிப்பும் விருத்தியும் மீதான தேசிய கொள்கையுடன் இணைந்துள்ளது.

# “சரியாக ஆரம்பித்தல்: இலங்கை பிள்ளைகளுக்கான முன் பிள்ளைப்பருவ விருத்தித் தரங்கள்”

கலாநிதி தே.முகுந்தன
விரிவுரையாளர், கல்விப்பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைப் பிள்ளைகளுக்கான முன் பிள்ளைப்பருவ விருத்தித் தரங்களை அமைப்பான அடிப்படை

- கலாசார ரீதியாக உணர்வு மிக்கதும் பொருத்தமானதுமான தேசிய தரங்களை உறுதிப்படுத்துதல்
- உயர்ந்த தரமுள்ள ஆரம்பக் கற்றல் சுற்றாடல்கள் ஊடாக தமது முழு ஆற்றலையும் விருத்தி செய்து கொள்வதற்கு பிள்ளைகளுக்குத் துணை புரிதல்
- இலங்கை பிள்ளைகளுக்கு உயர்ந்த தரமான அனுபவங்களை வழங்குவதற்கு குடும்பங்களுக்கும் வேலைத்திட்டங் களுக்கும் வழிகாட்டுதல்
- பிள்ளை இலகுவாக முறைசார் பாடசாலைக்குச் செல்ல ஏதுவாக்குதல்.

முன் பிள்ளைப்பருவ விருத்தி தரங்களின் ஆவணத்தின் வடிவமைப்பு

| | |
|---|---|
| *1.* வழிகாட்டல் கோட்பாடுகள் | *2.* ஆட்சிகள், உப ஆட்சிகள், குறித்த அம்சங்கள் |
| *3.* தரங்களும் குறிகாட்டிகளும் | *4.* உதாரணங்களும் வழிகாட்டலும் |

**வழிகாட்டல் கோட்பாடுகள்**

வழிகாட்டல் கோட்பாடுகள் பிள்ளை விருத்தியின் பண்புகள், பிள்ளைகள் கற்கும் விதம், முழுமையான விருத்திக்கு பிள்ளையின் சூழலின் முக்கியத்துவம் ஆகியவற்றை விவரிக்கின்றன. அது பிள்ளை விருத்தியைப் பற்றிய ஒரு விளக்கத்தையும் பிள்ளைகளுக்குத் துணை புரிவதற்கு பெற்றோரும் ஆசிரியைகளும் தேவையான அறிவைப் பெற்றுக் கொள்வதற்கு ஊக்குவித்தலையும் வழங்குகிறது.

## வழிகாட்டல் கோட்பாடுகள்

- முன் பிள்ளைப் பருவ விருத்தி முழுமையானதும் இடை-தாங்கியுள்ள பரிமாணங்களையும் கொண்டதாகும்.
- ஒவ்வொரு பிள்ளையும் தனித்துவமானவரும் சமனான பெறுமதியும் உள்ளவராவார்
- ஒவ்வொரு பிள்ளையும் தனது சொந்த கதியில் விருத்தியடைகிறது
- எல்லாப் பிள்ளைகளும் ஆற்றலும் தேர்ச்சியும் உள்ளவர்கள்
- கற்றல் விருத்தியின் உயிர்நாடியான பகுதியாகும்
- பிள்ளைகள் அவர்களது விருத்தி மீது செல்வாக்கு செலுத்தும் குடும்பம், சமுதாயம், கலாசாரம் ஆகியவற்றைக் கொண்ட சந்தர்ப்பமொன்றினுள் வாழ்கின்றனர்
- பிள்ளை விருத்தி அடைவதற்கு சூழலில் உள்ள மக்கள், பொருள்கள் என்பவற்றுடன் இடைத்தாக்கம் அவசியம் ஆகும்
- பிள்ளை விருத்தி அவர்களுக்கு வழங்கப்படும் பராமரிப்பின் பண்பில் தங்கியுள்ளது.
- பெற்றோர், பராமரிப்பாளர்கள், ஆசிரியை ஆகியோருக்கு முன் பிள்ளைப்பருவ பராமரிப்பும் விருத்தியும் பற்றிய அறிவு அத்தியாவசியம் ஆகும்.

**ஆட்சிகள், உப ஆட்சிகள், குறித்த அம்சங்கள்**

பிள்ளை விருத்தியை தனித்தனி பகுதிகளாகப் பிரிக்க முடியா திருப்பினும் உளவியலாளர்கள் அதனை இலகுவாக விளங்கிக் கொள்வ தற்காக மனித விருத்தியின் பண்புகளை ஆட்சிகளாகக் கலந்துரையாடியுள்ளனர். எனவே, ஆட்சிகளை பிள்ளையின் முழுமையான விருத்தியின் பரிமாணங்களாக வரைவிலக்கணங் கூறலாம்.

இலங்கைப் பிள்ளைகளுக்கான தரங்கள் தொகுதியை இனங் காண்பதற்காக விருத்தியின் நான்கு ஆட்சிகள் இனங்காணப்பட்டன. அவையாவன சுகாதாரமும் உடல்சார்ந்ததும், சமூகஞ் சார்ந்ததும் மனவெழுச்சியும், அறிவுசார்ந்ததும் மொழியும், ஆரம்ப எழுத்தறிவு என்பனவாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உப ஆட்சிகள் ஒவ்வோர் ஆட்சியினதும் அடிப்படை கட்டமைப்பை விளக்குகின்றன. ஒவ்வோர் ஆட்சிக்கும் கருத்திற் கொள்ளப்பட்ட உப ஆட்சிகளின் எண்ணிக்கை அவ்வாட்சியின் இயல்பிற்கு ஏற்ப வேறுபடுகின்றன. இலங்கைப் பிள்ளைகளுக்கான முன் பிள்ளைப்பருவ விருத்தித் தர ஆவணத்தில் உடல்சார், சமூகமும் மனவெழுச்சியும், மொழியும் முன் எழுத்தறிவும் ஆகிய ஒவ்வோர் ஆட்சியும் இரு உப ஆட்சிகளைக் கொண்டுள்ளதோடு அறிவுசார் விருத்தி ஆட்சி மூன்று உப ஆட்சிகளைக் கொண்டுள்ளது.


உப ஆட்சிகள் பிள்ளை விருத்தியின் ஒவ்வோர் அம்சத்தையும் தரங்களும் குறிகாட்டிகளும் உள்ளடக்குதலை உறுதிப்படுத்துவதற்காக மேலும் குறித்த அம்சங்களாக வகுக்கப்பட்டுள்ளன. மேலும், அது பிள்ளைகளின் விருத்தி மீளாய்வு செய்யும் பணியையும் இலகுவாக்கும். ஒவ்வோர் உப ஆட்சியினது பண்புகளுக்கு ஏற்ப குறித்த அம்சங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வேறுபடுவதோடு ஒவ்வொரு குறி காட்டியும் மற்றைய குறிகாட்டிகளுடன் உள்ள இணைபும் வேறுபடுகிறது.

பின்வரும் உருக்கள் இலங்கை பிள்ளைகளுக்கான முன் பிள்ளைப்பருவ விருத்தித் தரங்களின் ஆட்சிகள், உப ஆட்சிகள், குறித்த அம்சங்கள் என்பவற்றை விளக்குகின்றன.


**முன் பிள்ளைப்பருவ விருத்தித் தரங்களின் ஆட்சிகள்**




**உடல்சார் விருத்தி ஆட்சியின் உப ஆட்சிகளும் குறித்த அம்சங்களும்**





**சமூக, மனவெழுச்சிசார் விருத்தி ஆட்சியின் உப ஆட்சிகளும் குறித்த அம்சங்களும்**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அறிவுசார் விருத்தி ஆட்சியின் உப ஆட்சிகளும் குறித்த அமசங்களும்




### மொழியும் ஆரம்ப எழுத்தறிவும் ஆட்சியின் உப ஆட்சிகளும் குறித்த அம்சங்களும்




**தராங்களும் குறிகாட்டிகளும்**

முன் பிள்ளைப்பருவ விருத்தியின் தரங்கள் என்பன குறித்தவொரு வயதில் பிள்ளைகள் "அறிந்திருக்க வேண்டியவையும் செய்யக்கூடியவையும்" யாவை என்பன பற்றிய கூற்றுக்கள் ஆகும்.

ஒவ்வோர் ஆட்சியினுள்ளும் ஒவ்வொரு குறித்த அம்சத்திற்கான தரங்கள் தொகுதி உண்டு. பின்வருவனவற்றுடன் நிறைவுற்ற உள்ளடக்க வழிதாக்க கற்கைக்குப் பின்னர் இத்தரங்கள் நிறுவப் பட்டன.

- தரங்கள் பிள்ளை விருத்தியின் சகல அம்சங்களையும் உள்ளடக்குகின்றன.
- ஒவ்வோர் ஆட்சியிலும் உள்ள தரங்களும் குறிகாட்டிகளும் அந்த நோக்கைப் பிரதிபலிக்கின்றன
- தரங்கள் செவ்வையாக ஆட்சிகளையும் குறிகாட்டிகளையும் பிரதிபலிக்கின்றன
- குறிகாட்டிகள் உயர்ந்து செல்லும் ஒழுங்கில் அமைந்துள்ளன.

இத்தரங்கள் பெற்றோருக்கு தமது பிள்ளைகளைப் பற்றி யதார்த்தமான எதிர் பார்ப்புகளைக் கொண்டிருப்பதற்கும் ஆசிரியைகள் துணையான பழக்கங்களை அமுலாக்கு வதற்கும் உதவும்.

அடையப்பெற்ற தரங்களைக் காட்டும் அறிவையும் நடத்தைகளையும் குறிகாட்டிகள் எடுத்துக்காட்டுகின்றன. அவை குறித்தவொரு வயதில் எதிர்பார்க்கப்படும் அறிவையும் திறன்களையும் காட்டுகின்றன. குறிகாட்டிகள் பிள்ளைகள் குறித்த திறன்களையும் அறிவையும் அடைவதற்கு அவர்கள் எவ்வாறு உதவலாம் என்பதைத் தீர்மானிப்பதற்கு பெற்றோருக்கும் பாதுகாவலர்களுக்கும் உதவுகின்றன. அத்தோடு குறிகாட்டிகளின் ஊடாக அவர்களுக்கு பிள்ளைகள் குறிப்பிடப்பட்ட தரங்களை அடைந்துள்ளனரா என அறிந்து கொள்ள முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதாரணங்களும் வழிகாட்டலும்**

உதாரணங்கள் குறிகாட்டிகளின் செயற்பாட்டு வரைவிலக்கணங்களாக இருக்கும் அதேவேளையில் வழிகாட்டல் பெற்றோரும் ஆசிரியர்களும் தரங்களை அடைவதற்காக எடுக்கக் கூடிய நடவடிக்கைகளை வழிகாட்டல் குறிப்பிடுகிறது. ஒரு குறித்த குறிகாட்டி தொடர்பாக பிள்ளைகள் வெளிப்படுத்தும் நடத்தையின் இயல்பை விளங்கிக் கொள்வதற்கு இந்த ஆவணத்தில் தரப்பட்டுள்ள உதாரணங்கள் உதவும். இந்நடத்தைகளை வெளிப்படுத்துவதற்கு பிள்ளைகளை பலவந்தப்படுத்த முடியாததோடு பலவந்தப்படுத்தவும் கூடாது. ஆனால் தூண்டக்கூடிய சூழல்கள் வழங்கப்படின் அவர்கள் இந்நடத்தைகளை வெளிப்படுத்துவதற்கான அறிவையும் திறன் களையும் கிரமமாக பெற்றுக் கொள்வர். இந்த ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல் பிள்ளைகளுக்கு அவ்வாறான சூழல்களை எவ்வாறு வழங்குவது எனும் அறிவை வழங்குகிறது. தூண்டக்கூடிய சூழலொன்றை வழங்குவதற்கான சகல விவரங்களையும் அவை வழங்குவதில்லை. இவ்வழிகாட்டலை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியைகளும் பெற்றோரும் இத்தரங்களை அடைவதற்குப் பிள்ளைக்கு துணைபுரியக்கூடிய பொருத்தமான உத்திகளை தீர்மானிக்க முடியும்.

இந்த ஆவணத்தில் சிலவேளைகளில் இரு வயது மட்டங்களையும் சேர்ந்த பிள்ளை களுக்கு ஒரே உதாரணங்களும் வழிகாட்டல்களும் வழங்கப்பட்டுள்ளன. இதற்குக் காரணம் பிள்ளை விருத்தி திரளானது என்பதோடு அது படிமுறை அடிப்படையில் நிகழுகிறது என்பதாகும். பெற்றோரும் ஆசிரியைகளும் பிள்ளையின் தற்போதைய விருத்தி மட்டத்தை இனங்கண்டு படிமுறையான துணையை வழங்க வேண்டும்.

**ஆட்சி: உடல்சார் விருத்தி**

மற்றைய எல்லா விருத்தியிலும் உடல்சார் விருத்தி அடிப்படையானதாகும். அது பிள்ளைகள் எவ்வளவு சிறப்பாக பொருள்களை கையாள முடியும் என்பதையும் தம்மைச் சூழவுள்ள உலகுடன் இடைத்தாக்கம் புரிய முடியும் என்பதையும் தீர்மானிக்கிறது. பின்னர் வரும் சாதனைகள் அனைத்துக்குமான அத்திவாரத்தை இளம் பிள்ளைகளின் ஆரோக்கியமும் இயக்கத் திறன்களும் தீர்மானிக்கின்றன. நல்ல சுகாதார பழக்கங்களும் சொந்த பாதுகாப்பிற்கான கவனிப் பும் ஆரோக்கியமான வாழ்க்கையை உறுதிப்படுத்துவதோடு பாரிய, நுண் இயக்கத் திறன்கள் அவர்களது கற்றலையும் சுய எண்ணக்கருவையும் ஊக்குவிக்கின்றன. பெற்றோர், ஆசிரியைகள், பராமரிப்பாளர்கள் ஆகியோர் பிள்ளைகள் நல்ல சுகாதார பழக்கங்களை விருத்தி செய்து கொள்வதற்கும் அவர்களது இயக்கத் திறன்களை ஊக்குவிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும் வழிகாட்டலையும் வாய்ப்புகளையும் வழங்க வேண்டும்.

தரங்கள்: 3 - 5 ஆண்டுகள்

தரம் 1: பிள்ளை ஆரோக்கியமான வாழ்க்கை பழக்கங்களின் வளர்ந்து வரும் விழிப்புணர்வை வெளிப்படுத்துகிறார்

தரம் 2: பிள்ளை பாதுகாப்பானதும் பாதுகாப்பதுமான நடவடிக்கைகளில் வளர்ந்து வரும் விழிப்புணர்வை வெளிப்படுத்துகிறார்

தரம் 3: பிள்ளை பாரிய இயக்கத் திறன்களின் விருத்தியை வெளிப்படுத்துகிறார்

தரம் 4: பிள்ளை நுண் இயக்கத் திறன்களின் விருத்தியை வெளிப்படுத்துகிறார்

**ஆட்சி: சமூக, மனவெழுச்சி விருத்தி**

சமூக, மனவெழுச்சி விருத்தி ஒரு பிள்ளையின் தொடர்புகளை விருத்தி செய்தல், பொருத்தமான விதத்தில் உணர்வுகளை வெளிப்படுத்துதல், சமூகத்தில் நன்கு சீராக்கப்பட்ட ஒருவராக ஆகுதல் போன்ற ஆற்றலை விருத்தி செய்தலைத் தீர்மானிக்கிறது. சமூக, மனவெழுச்சி விருத்தி பாடசாலையில் ஒரு பிள்ளையின் வெற்றிக்கும் மிக முக்கியமானதாகும். விளையாட்டு, இடைத்தாக்கம் என்பவற்றின் ஊடாக பெறப்பட்ட நேர் சமூக, மனவெழுச்சி நடத்தையுடன் பாட சாலைக்குப் பிரவேசிக்கும் பிள்ளைகள் கல்விசார் செயற்பாடுகளில் நன்கு செயற்படுகின்றனர். எனவே, பெற்றோரும் பராமரிப்பாளர்களும் பிள்ளைகள் நாட்டின் பெறுமதியான பிரசைகளாக வளர்வதற்கு அவர்களுக்கு உதவுவதற்காக பிள்ளைகளின் சமூகத் திறன்களின் விருத்திக்கும் மனவெழுச்சி நிலைப்பாட்டிற்கும் பொருத்தமான சூழல்களை வழங்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3-5 ஆண்டுகள்

தரம் 1: பிள்ளை வளர்ந்தோருடன் நேரத் தொடர்புகளின் விருத்தியை எடுத்துக்காட்டுகிறார்

தரம் 2: பிள்ளை சமவயதினருடன் நேரத் தொடர்புகளின் விருத்தியை எடுத்துக்காட்டுகிறார்

தரம் 3: பிள்ளை சமூகஞ்சார் நடத்தைகளின் விருத்தியை எடுத்துக்காட்டுகிறார்

தரம் 4: பிள்ளை நேர் சுய புலக்காட்சியின் விருத்தியை எடுத்துக்காட்டுகிறார்

தரம் 5: பிள்ளை உந்தல்களைக் கட்டுப்படுத்துவதற்கு வளர்ந்து வரும் ஆற்றலைஎடுத்துக்காட்டுகிறார்

தரம் 6: பிள்ளை மனவெழுச்சிகளைப் பொருத்தமான விதத்தில் வெளிப் படுத்துவதற்கு வளர்ந்து வரும் ஆற்றலை எடுத்துக்காட்டுகிறார்

**ஆட்சி: அறிவுசார் விருத்தி**

அறிவுசார் விருத்தி என்பது ஒரு பிள்ளையின் வாழ்க்கையின் தொடக்கத்தில் ஏற்படும் அப்பிள்ளையின் நுண்மதிசார் ஆற்றல்கள் (சிந்தித்தல், காரணப்படுத்துதல், பிரச்சினை தீர்த்தல் போன்றன) ஆகும். அது பிள்ளை தனது சொந்த அனுபவங்களுக்கு ஏற்ப தன்னைச் சூழவுள்ள உலகை அறிந்து கொள்வதற்கு உதவுகிறது. பிள்ளை ஒவ்வொன்றும் எவ்வாறு நிகழுகிறது, மக்கள் எவ்வாறு மறுதாக்கம் புரிகின்றனர் என்பவற்றை மட்டுமல்லாது தான் வாழும் சமுதாயத்தைப் பற்றியும் தெரிந்து கொள்வதற்கு ஆர்வம் கொண்டுள்ளது. கற்றுக் கொள்வதற்காக பிள்ளை பயன்படுத்தும் சக்திவாய்ந்த கருவி ஆராய்வூக்கம் என்பதோடு பிள்ளை பொருள்களை கையாண்டு பார்த்து துருவியாராந்து தன்னைச் சூழவுள்ள மக்களும் இடைத்தாக்கம் ஏற்படுத்தும் போது கற்றல் நிகழுகிறது. கற்பனை செய்தல், தர்க்கரீதியாக சிந்தித்தல், கணிதம் போன்ற வற்றுடன் தொடர்புபட்ட பல அறிவுசார் பணிகளுக்கான அத்திவாரம் முன்பள்ளிக் காலத்திலேயே இடப்படுகிறது. எனவே, பிள்ளைக்கு அதன் ஆராய்வூக்கத்தைத் திருப்தி செய்து அதன் நுண்மதி சார் ஆற்றல்களை ஊக்குவிப்பதற்கு துண்டல்மிக்க ஆரம்ப சுற்றாடல் ஒன்று தேவை யாகும். இச்சுற்றாடலில் பெற்றோர், ஆசிரியைகள், பராமரிப்பாளர்கள் ஆகியோர் ஒரு முக்கிய மான நடிப் பாங்கை வகிக்கின்றனர். பிள்ளையின் நுண்மதிசார் ஆற்றல்களை ஊக்குவிக்கும் செயற் பாடுகளில் அவர்களது ஈடுபாடு பிள்ளை கற்றல் மீது நேர் மனப்பாங்குகளை விருத்தி செய்து கொள்வதற்கு உதவும்.

தரங்கள்: 3 - 5 ஆண்டுகள்

தரம் 1: பிள்ளை ஆராய்வூக்கத்தினதும் முன்னெடுப்பினதும் விருத்தியை எடுத்துக்காட்டுகிறார்

தரம் 2: பிள்ளை செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் போது விடாமுயற்சியின் விருத்தியை எடுத்துக் காட்டுகிறார் (வயது 5 ஆண்டு பிள்ளைகளுக்கு)

தரம் 3: பிள்ளை ஆக்கத்திறனினதும் கற்பனையினதும் விருத்தியை எடுத்துக்காட்டுகிறார்

தரம் 4: பிள்ளை பிரச்சினை தீர்ப்பதற்கு வித்தியாசமான உத்திகளைப் பயன்படுத்துவதற்கான வளர்ந்து வரும் ஆற்றலை எடுத்துக்காட்டுகிறார்

தரம் 5: பிள்ளை புறநிலை சந்தர்ப்பங்களில் காரணத்திற்கும் விளைவிற்கும் இடையே உள்ள தொடர்பு பற்றிய வளர்ந்து வரும் விழிப்புணர்வை எடுத்துக்காட்டுகிறார்

தரம் 6: பிள்ளை ஒப்பீடுகள் செய்தலில் வளர்ந்து வரும் ஆற்றலை பிள்ளை எடுத்துக்காட்டுகிறார்

தரம் 7: பிள்ளை அளத்தல் எண்ணக்கருவின் வளர்ந்துவரும் விழிப்புணர்வை எடுத்துக்காட்டுகிறார் (வயது 5 ஆண்டு பிள்ளைகளுக்கு மட்டும்)

தரம் 8: பிள்ளை எண் எண்ணக்கருக்களின் வளர்ந்துவரும் விழிப்புணர்வை எடுத்துக்காட்டுகிறார்

தரம் 9: பிள்ளை விசாரிக்கும் சிந்தனையின் விருத்தியை எடுத்துக்காட்டுகிறார்

தரம் 10: பிள்ளை உலகில் உள்ள உயிர் வாழுபவை பற்றிய வளர்ந்துவரும் விழிப்புணர்வை எடுத்துக் காட்டுகிறார்

தரம் 11: பிள்ளை உலகில் உள்ள உயிரற்றவற்றைப் பற்றிய வளர்ந்துவரும் விழிப்புணர்வை எடுத்துக் காட்டுகிறார்

தரம் 12: பிள்ளை தான் வாழும் சமுதாயம் பற்றிய விழிப்புணர்வொன்றை எடுத்துக்காட்டுகிறார்

**ஆட்சி: மொழியும் ஆரம்ப எழுத்தறிவும்**

பிள்ளைகளின் மொழித்திறன்கள் முன்பள்ளி ஆண்டுகளில் துரிதமாக விருத்தி அடைகின்றன. இக்காலகட்டத்தில் அவர்களுக்குப் பல்வேறு விடயங்களைப் பற்றி உரையாட முடியும் என்பது மட்டுமன்றி சொற்களின் தொழிற்பாடுகள் பற்றிய விளக்கமொன்றும் உண்டு. எவ்வாறெனினும் புதிய சொற்களைக் கற்றுக் கொள்வதற்கும் தமது எழுத்தறிவு திறன்களை விருத்தி செய்து கொள்வதற்கும் அவர்களுக்கு வளர்ந்தோரின் துணை தேவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர், ஆசிரியர்கள், பராமரிப்பாளர்கள் ஆகியோருட னான இடைத்தாக்கங்கள் அவர்களுக்கு செவிமடுத்தல், பேசுதல் ஆகிய திறன்களை விருத்தி செய்து கொள்வதற்கான வாய்ப்புகளை வழங்குகின்றன. அவர்கள் அச்செழுத்துகளை இனங்காண முடியாதிருப்பினும் பிள்ளைகளுக்கு வாசித்துக் காட்டுதல் முன்வாசிப்புத் திறன்களின் விருத்திக்கு அவர்களுக்கு உதவுகிறது. அவ்வாறே, பிள்ளைகளை கிறுக்குவதற்கு, வரைவதற்கு, வித்தியாசமான கருவிகளுடன் பரிசோதனை செய்வதற்கு, புலனியக்க செயற்பாடுகளை அனுபவிப்பதற்கு அனுமதிப்பதனால் முன்வாசிப்புத் திறன்கள் ஊக்குவிக்கப்படுகின்றன. எனவே, முன்பள்ளி ஆண்டுகளில் மொழி விருத்தியும் ஆரம்ப எழுத்தறிவு திறன்களும் கற்றல், கல்வி ஆகிய இரண்டிலும் பிள்ளையின் பிற்கால வெற்றிக்கு அத்தியாவசியமாகும்.

தரங்கள்: 3 - 5 ஆண்டுகள்

| | |
|---|---|
| தரம் 1: | பிள்ளை அவதானத்துடன் செவிமடுத்தலில் வளர்ந்துவரும் ஆற்றலை எடுத்துக்காட்டுகிறார் |
| தரம் 2: | பிள்ளை சொற்களிலான வெளிப்படுத்துதல்களையும் உடல் மொழியையும் விளங்கிக் கொள்வதற்கான வளர்ந்துவரும் ஆற்றலை எடுத்துக்காட்டுகிறார். |
| தரம் 3: | பிள்ளை பல்வேறு நோக்கங்களுக்காக தேவைகள், உணர்வுகள், அனுபவங்கள் ஆகியவற்றை வெளிப்படுத்துவதற்கான வளர்ந்துவரும் ஆற்றலை எடுத்துக்காட்டுகிறார் |
| தரம் 4: | பிள்ளை உரையாடல்கள், கதைகள், பாடல்கள்/சிறுவர் பாடல்கள் ஆகியவற்றில் இருந்து தகவல்களை கிரகிப்பதற்கான வளர்ந்துவரும் ஆற்றலை எடுத்துக்காட்டுகிறார் |
| தரம் 5: | பிள்ளை அச்சிடப்பட்டவற்றில் வளர்ந்துவரும் ஆர்வத்தை எடுத்துக்காட்டுகிறார் |
| தரம் 6: | பிள்ளை அச்சிடப்பட்டதில் செய்தியொன்று உண்டு எனும் வளர்ந்துவரும் விழிப்புணர்வை எடுத்துக்காட்டுகிறார் (4 - 5 ஆண்டு வயது பிள்ளைகளுக்கு மட்டும்) |
| தரம் 7: | பிள்ளை முன்-வாசிப்புத் திறன்களின் விருத்தியை எடுத்துக்காட்டுகிறார் |
| தரம் 8: | பிள்ளை முன்-எழுத்துத் திறன்களின் விருத்தியை எடுத்துக்காட்டுகிறார் |

**நிறைவுரை**

இலங்கையில் முன்பள்ளிப் பருவப் பிள்ளைகளின் தரங்களை அறிதற்காக உருவாக்கப் பட்ட ஆவணத்தினை இக்கட்டுரை விளக்குகின்றது. பிள்ளைகளின் தரங்களை அறிந்த கொள்வதற்காக இதனைப் பயன்படுத்த முடியும்.

**உசாத்துணை**

Early Childhood Development Standards for Sri Lankan Children, (2017) Children Secretariat, Ministry of Women & Child Affairs, Sri Lanka.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அறிமுகம்**

கல்வி வளர்ச்சியின் மற்றுமொரு பரிமாணமாக கற்பித்தல் முறைமையில் இடம் பெறுவது உட்படுத்துகைக் கல்வி எண்ணக்கரு வாகும். உட்படுத்துகை கல்வியானது விசேட தேவை களுடைய மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை மேம்படுத்தும் பொருட்டு உருவாக்கப்பட்ட கல்விச் செயற்பாடாகும். இவ் உட்படுத்துகை கல்வி தொடர்பில் பல கல்வியியலாளர்கள் கருத்துக்களை முன் வைத்துள்ளனர். அந்த வகையில் நாம் நோக்குகை யில் சாதாரண மாணவர்களுடன் இணைந்த வகுப் பறைச் செயற்பாட்டில் விசேட தேவைகளுடைய மாண வர்கள் கல்வி சார் நடவடிக்கைகளில் இணைந்து செயற்படுவதுடன் பின்பு கல்வி ரீதியாகவும், நடத்தை ரீதி யாகவும் அவர்களுடன் தொடர்பினைப் பேண முடியும்.

சாதாரண மாணவர்களுடன் இணைந்த வகுப்பறைச் செயற்பாடு என்பது ஓர் கல்விசார் முறைமையாகும். இங்கு விசேட தேவைகளுடைய மாணவர்கள் அவர்களுக்கான மேலதிக செயற்பாடு களுடன் இணைந்த வகையில் சாதாரண மாணவர் களுடன் கல்வியைப் பெற்றுக் கொள்கின்றார்கள். இவ்வாறான சாதாரண மாணவர்களுடனிணைந்த வகுப்பறைச் செயற்பாடானது விசேட தேவையினை உடைய மாணவர்களின் கற்றல் வேறுபாட்டிற்கான ஒரு நடைமுறைத்தீர்வாகும். ஆகவே விளை திறன்மிக்க உட்படுத்துகை வகுப்பறைச் செயற்பாட்டின் பண்புகள் மற்றும் சிறப்பான முறையில் மேற் கொள்வ தற்கான நுட்பங்களினை நாம் நோக்குகையில்,

**விளைதிறன்மிக்க உட்படுத்துகை வகுப்பறைச் செயற்பாட்டின் பண்புகள்**

1. விசேட தேவைகளுடைய மாணவர் களுக்கு சமத்துவமான வாய்ப்புகளை வழங்குவதாகவும் அத்துடன் சமூகத்தில் உள்ள மற்றையவர்களைப் போல சுதந்திரமான வாழ்க்கைக்கு தயார்ப்படுத்து வதாகவும் உள்ளது.
2. சாதாரண மாணவர்கள் அத்துடன் விசேட தேவைகளுடைய மாணவர்கள் ஆகிய இருவருக்கு மிடையில் ஆரோக்கியமான சமூக உறவினை ஏற்படுத்துவதாகவும் அத்துடன் உடல் வேறுபாடு களை சமத்துவமான சமூகச் செயற்பாடுகளினூடாக அடைவதாகவும் உள்ளது.
3. விசேட தேவைகளுடைய மாணவர்கள் சாதாரண மாணவர்களைப் போன்று வளரக் கூடிய வகையிலும் விருத்தியடையக்கூடிய வகையிலும் பயன் மிக்க சூழலை வழங்குவதாக காணப்படுகிறது.
4. அடிப்படைக் கல்வி இலக்குகளை அடை யும் பொருட்டு விசேட தேவைகளுடைய மாணவர் களுக்கு சமத்துவமான கல்வி அத்துடன் அபிவிருத்தி வாய்ப்புக்கள் என்பனவற்றை வழங்கும் செயற் பாடாக உள்ளது.
5. விசேட தேவைகளுடைய மாணவர் கள் சாதாரண மாணவர்களைப் போன்று சமத்துவ மாக கருதப்படுவதற்கான ஓர் ஏற்பாடாக உள்ளது.
6. விசேட தேவைகளுடைய மாணவர்களை தனிப்பட்ட ஒருவராக மதித்து சொந்த உரிமைகளை வழங்குவதாக உள்ளது.
7. சாதாரண வகுப்பு ஆசிரியர்கள், விசேட ஆசிரியர்கள், பெற்றோர்கள் அத்துடன் சமூக உறுப்பினர்களுடன் இணைந்த ஓர் கூட்டு முயற்சி யாக உள்ளது.
8. விசேட தேவைகளுடைய மாணவர்களுக் கான ஓர் பொருளாதார செயற்பாடாகவும் அத்துடன் விசேட வகுப்பறைகளில் ஈடுபடும் போது ஏற்படும் பிரச்சினையை தீர்ப்பதாகவும் உள்ளது.
9. வாழ்க்கைத் தரத்தினை விருத்தி செய்யும் பொருட்டு சிறந்த உரிமைகளினை வழங்குவதற் கான ஆரம்ப படிநிலையாக உள்ளது.

# விளைதிறன்மிக்க உட்படுத்துகை வகுப்பறைச் செயற்பாட்டின் பண்புகளும், நுட்பங்களும்

ர.விவேகானந்தராசா

கல்விப்பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### விளைதிறன்மிக்க உட்படுத்துகை வகுப்பறைச் செயற்பாட்டின் நுட்பங்கள்

உட்படுத்துகை வகுப்பறைச் செயற் பாட்டினை விளைதிறனுள்ளதாக மாற்றிக் கொள்வ தற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய அம்சங்கள் கீழே குறிப்பிடப்படுகின்ற கற்றல் கற்பித்தல் செயற்பாட்டு நுட்பங்களினூடாக விளக்கப்படுகின்றன.

### கலைத்திட்டம்

அனைத்து ஆசிரியர்களது தயார்படுத்த லானது உட்படுத்துகை வகுப்பறைச் செயற்பாட்டிற் கேற்ப முன் பள்ளியில் இருந்து இடைநிலை வரை கலைத்திட்ட கொள்கைகள். வழிகாட்டல்கள். அமைப்புக்கள் என்பவற்றுடன் இணைந்த முதற் தர அனுபவத்தை கொண்டிருக்க வேண்டும்.

### கற்பித்தல் அடிப்படைத் திறன்கள்

ஆசிரியர்களினுடைய தயார்படுத்தலானது உட்படுத்துகை வகுப்பறைச் செயற்பாட்டில் அடிப்படைத் திறன்களை கற்பிப்பதில் ஆற்றலை நிலை நாட்டு வதற்கான அடிப்படை விடயங்களை கொண்டிருத்தல் வேண்டும்.

### வகுப்பறை முகாமைத்துவம்

அனைத்து ஆசிரியர்களும் உட்படுத்துகை வகுப்பறை முகாமைத்துவ செயற்பாடுகளில் கைதேர்ந்தவராக இருக்கவேண்டும் அத்துடன் அவர் வகுப்பறை முகாமைத்துவத்தில் சுற்று சூழல் தொடர்பில் குழு நுட்பங்கள் என்பவற்றையும் உள்ளடக்குதல் வேண்டும்.

### தொழில் சார் கலந்துரையாடல்கள் அத்துடன் தொடர்பாடல்கள்

வினைத்திறன் மிக்க தொடர் கலந்துரை யாடல்கள் தொழில் சார் தொடர்பாடலினுடைய மற்றைய வடிவங்கள் போன்றவற்றை சிறந்த முறையில் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கான வாய்ப்புக்களை ஆசிரியர்கள் கொண்டிருப்பதுடன் ஆசிரியர்களுக்கும் அவசியமானதாகும். அத்துடன் அனைத்து ஆசிரியர்களும் குழுப்பிரச்சினைகளை தீர்ப்பதில் திறமையுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

### ஆசிரியர், பெற்றோர், மாணவர் தொடர்பு

ஆசிரியர்கள் விசேட தேவைகளுடைய மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் சகோதரர் களுடன் தொடர்புகளை மேற்கொள்வதற்கான திறன்களை கொண்டிருத்தல் வேண்டும்.

### மாணவர்களுக்கிடையிலான தொடர்பு

அனைத்து ஆசிரியர்களும் சாதாரண மாணவர்களுடன் பயன்மிக்க தொடர்புகளை மேற்கொள்வதற்கான உடன்பாடான மனப் பாங்கு களை விசேட தேவைகளுடைய மாணவர்கள் மத்தி யில் கொண்டு செல்வதற்குரிய தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

### தனிப்பட்ட கற்பித்தல்

ஆசிரியர்கள் விசேட தேவைகளுடைய மாணவர்களை தனிப்பட்ட முறையில் சந்தித்து அவர்களது தேவைகளை நிறைவேற்றுவதற்கும் மற்றைய மாணவர்களுடன் இடையூடாட்டத்தை பேணுவதற்குமான வகையில் தனிப்பட்ட கற்பித்தல் செயற்பாடு அவசியம்.

### தொழில் சார் விழுமியங்கள்

கல்வியலாளர்களுடைய விழுமியங்கள் அனைத்தும் விசேட தேவைகளுடைய மாணவர் களது தேவைகளாகவும், உரிமைகளாகவும் இருத்தல் வேண்டும்.

### முடிவுரை

விசேட தேவையுடைய மாணவர்கள் சாதாரண மாணவர்களைப் போன்று வகுப்பறை யில் கவனஞ் செலுத்தப்பட வேண்டியவர்களாக உள்ளார்கள் என்பதில் எந்தவித ஐயமுமில்லை என்பதோடு இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்தது விடயங்களும் அவர்களது வகுப்பறைச் செயற்பாட்டினை அதாவது உட்படுத்துகை வகுப் பறைச் செயற்பாட்டினை விளைதிறன் மிக்கதாக மாற்றிக்கொள்வதற்கு அடிப்படையாக அமையும்.

### உசாத்துணைகள்

மகேசன். V, (2010), விசேட கல்வியும் ஆலோசனை வழங்கலும், 126/1, Trinco Road, Poompuhar, Batticaloa.

விசேட தேவைகள்சார் கல்விக்கான பல்துறை அணுகு முறைகள் (2010), இலங்கை திறந்த பல்கலைக் கழகம் நாவல, நுகெகொட.

செல்வநாயகம். இ, இரவீந்திரன். ஆ, (2007), சீரியசிந்தனை, Thiruvalluvar press, 593, Point pedro,Nallur, Jaffna.

Chintamanikar (2004), ***Exceptional children***, Sterling publishers pvt, New Delhi



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன் குழந்தைப்பருவத்தினரின் வளர்ச்சிக்கட்ட குணவியல்புகளை கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் ஒருங்கிணைத்தல்

யேசுஜயா டிலானி

விரிவுரையாளர், முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்ப கல்வித்துறை, கல்விப்பீடம்

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

### அறிமுகம்

சமூகத்தின் மிகச்சிறிய ஆக்க அலகான குடும்பத்தின் தலைவர்களாகப் பெற்றோர்களும் அவர்களின் வாழ்க்கையினை ஒளியூட்டும் விளக்குகளாக குழந்தைகளும் காணப்படுகின்றனர். ஒவ்வொரு பெற்றோரும் தாம் ஈன்றெடுத்த பிள்ளைகள் நட்சத்திரங்களாக சமூகவானில் ஒளிர வேண்டும் என்று விரும்புகின்றனர். ஆற்றலும் ஆளுமையுமுள்ள பிள்ளைகளை உருவாக்குவதற்கு கருவறையிலிருந்தே கற்பித்தலும் கற்றலும் நிகழ்வது பிள்ளையின் வளர்ச்சிக்கு சிறந்ததென பிள்ளை விருத்தி ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. தாயின் கருவறையில் கற்க ஆரம்பிக்கும் குழந்தை பின்னர் தனது குடும்பம், தான் வாழும் சூழல் என்பவற்றிலிருந்தும் கற்றுக்கொள்கிறது. இதனாலேயே குழந்தையின் முதல் ஆசான் அப்பிள்ளையின் தாய் எனக்குறிப்பிடப்படுகிறது. குழந்தை காலவளர்ச்சியுடன் நிறுவன மையப்பட்ட கற்றலுக்குள் உள்நுழைவதற்கான முதலிடமாக முன்பள்ளி எனும்அமைப்பினுள் கால்பதிக்கிறது. குடும்பத்திலிருந்து விடைபெற்று புதுமுகங்களுடன் பழக ஆரம்பிக்கும் குழந்தை புதிய சூழலுடன் இசைவாக்கப்படவும் இயைந்து செல்லவும் கற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறான பலதரப்பட்ட சூழலிலிருந்து வரும் குழந்தைகளை வழிப்படுத்தி வகுப்பறை கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாடுகளைச் சிறந்த முறையில் ஒழுங்குபடுத்துவதற்கு பிள்ளைகளின் வளர்ச்சி மற்றும் விருத்தி பற்றிய அறிவு ஒவ்வொரு ஆசிரியருக்கும் இன்றியமையாததாகும். இத்தொனிப் பொருளை அடிப்படையாகக் கொண்டு முன்பள்ளிகளில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை சிறந்த முறையில் திட்டமிடுவதற்கு தேவையான முன்பள்ளிகளோடு தொடர்புபட்ட வளர்ச்சிக்கட்டத்திற்கான குணவியல்புகளை முன்வைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

### வளர்ச்சியும் விருத்தியும்

குழந்தையின் வளர்ச்சியும் விருத்தியும் என்ற எண்ணக்கருக்களோடு தொடர்புபட்ட வகையில் பிள்ளைகளின் வளர்ச்சிக் கட்டம் பற்றி பல்வேறு குழந்தைக் கல்வி உளவியலாளர்கள் பல்வேறு கருத்துக்களை தெரிவித்ததோடு பல்வேறுவகையான கொள்கைகளையும் கோட்பாடுகளையும் முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. கொள்கைளையும் கோட்பாடுகளையும் முன்வைத்தவர்களில் ஆர்னல்ட் கெஸல், சிக்மன் பிறைட், வில்கெம்வூன்ட், அல்பிறட் பீனே, இயன் பவ்லோவ், ஜீன் பியாஜே போன்றோர் முக்கிய இடம் வகிக்கின்றனர்.

வளர்ச்சியும் விருத்தியும் என்ற இரு செயன்முறைகளின் மூலம் குழந்தையில் பல்வேறு மாற்றங்களுண்டாகின்றன. வளர்ச்சியானது பிள்ளையின் உயரம், நிறை என்பவற்றில் மாற்றத்தை ஏற்படுத்த விருத்தியானது பண்புகளில், திறன்களில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. திறன் விருத்தியானது பிள்ளையின் வளர்ச்சிக்கட்டங்களில் ஏற்படும் மாற்றங்களோடு மட்டுமன்றி சூழலிலிருந்து பெற்றுக்கொள்ளும் அனுபவங்களின் ஊடாகவும் ஏற்படுகின்றது எனலாம். பிள்ளை ஒன்று தனது செயற்பாட்டு விருத்திக்கு அடிப்படையான புலனறிவைப் பெற்றுக்கொள்ள அப்பிள்ளையின் அவயங்களின் வளர்ச்சியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணைபுரிகிறது. எனவே பிள்ளை விருத்தியில் சூழலிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் அனுப வங்கள் விசேட செல்வாக்கு செலுத்துவதோடு பிள்ளையின் அவயங்களில் தூண்டல் விருத்தியை உண்டாக்குகின்றன. எனவே பிள்ளை விருத்தி என்பது சூழலிலிருந்து பெற்றுக் கொள்ளும் பிள்ளையின் வளர்ச்சியுடன் தொடர்பான உதவிகளுக்கும் வழிகாட்டல் களுக்கும் ஏற்ப ஒழுங்கமைக்கப்பட்ட முறை யான உருவாக்கத்தின் விளைவாகும். இவ்வாறு பிள்ளையின் விருத்தியிலும் வளர்ச்சியிலும் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணி களாக பரம்பரையும், சூழலும், முதிர்ச்சியும் கற்றலும் காணப்படுகின்றன.

மனித வாழ்வில் பிரதான வளர்ச்சிக் கட்டங்களாக குழந்தைப்பருவம், பிள்ளைப் பருவம், கட்டிளமைப்பருவம், வளர்தோர் பருவம் என பல கட்டங்கள் காணப்படு கின்றன. பிள்ளைவிருத்தியில் பிறப்பு முதல் 18 வயது வரை இடம்பெறுகின்ற கற்றலும் வளர்ச்சியும் இன்றியமையாததாகும். இக் காலப் பகுதியிலேயே பிள்ளையின் உடல், உள, மனவெழுச்சி, சமூக ஒழுக்கம் சார் வளர்ச்சிக் கான அடித்தளங்கள் ஏற்படுகின்றன.

எனவே பிள்ளையின் ஆரம்ப கால விருத்திப் பருவமானது மிகமுக்கியமான தாகும். ஏனெனில் இப்பருவத்தில் பிள்ளையின் முழு நிறைவான வாழ்க்கைக்கு உதவுகின்ற அறிவு, திறன், மனப்பாங்குகள் கட்டியெழுப் பப்பட்டு வாழ்கைத்தேர்சிகளுக்கான அத்தி வாரம் இடப்படுகிறது. இந்தவகையில் குழந்தைகள், வையகத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு தேவையான அடிப்படையான வாழ்க்கைத்தேர்ச்சிகளை வழங்குகின்ற முன் பள்ளி ஆசிரியர்கள், முன்பள்ளி பிள்ளைகளது வளர்ச்சிக்கட்டங்களையும் வளர்ச்சிக்கட்டங் களுக்குரிய குணவியல்புகளையும் அறிந்து கொள்வது இன்றியமையாதது. காரணம் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை திட்ட மிட்டு நடைமுறைப்படுத்த இவ்வறிவு அவசிய மானதாகும்.

**குழந்தைப்பருவம்**

சகலவிதமான அடிப்படை ஆற்றல் களோடும் பிறக்கும் குழந்தை தான் வாழும் சூழலுக்கேற்றவாறு தூண்டல், துலங்கலைக் காட்டும். குழந்தைப்பருவத்தினை வயதினடிப் படையில் உளவியலாளர்கள் இருவகைப் படுத்துகின்றனர்.

- முன் குழந்தைப்பருவம்
- பின் குழந்தைப்பருவம்

இப்பருவத்தில் ஏற்படும் மாற்றங்களை பின்வரும் விருத்தி நிலைமைகளின் கீழ் சிறப்பாக ஆராயலாம்.

- உடலியக்க வளர்ச்சி
- இயக்கத்திறன்களின் வளர்ச்சி
- புலனுணர்ச்சிகளின் வளர்ச்சி
- சமூகமனவெழுச்சி வளர்ச்சி
- மொழி வளர்ச்சி
- ஆரம்ப அறிவு வளர்ச்சி

**உடலியக்க வளர்ச்சி**

உடலியக்க வளர்ச்சியென்பது வயது அதிகரிப்பதுடன் ஒருவரின் உடல் உறுப்புக் களில் ஏற்படுகின்ற மாற்றங்களைக் குறிக் கிறது. குழந்தையின் முதலிரு வருடங்களிலும் உயரத்திலும் நிறையிலும் விரைவான வளர்ச்சி அடைகின்ற குழந்தையின் நிறை ஐந்து மாத நிறைவில் இருமடங்காகவும் 12 மாதத்தில் மூன்று மடங்காகவும் அதிகரிப்பதோடு குழந்தை தனது வாழ்வின் ஆரம்ப கட்டத்தில் தான் சார்ந்திருக்கின்ற வளர்ந்தோரிலேயே தங்கியிருக்கும். பின்னர் மெதுவாக அசைவி யக்க திறன்களைப் பெறுவதோடு, மொழி யைப் பயன்படுத்த ஆரம்பிக்கின்றது.

இதே வேளையில் முதல் வயதில் 10-12 அங்குல உயரத்தையும் இருவயது முடிவில் தளர்நடைபகுதியினராக தமது பின்னைய வளர்ச்சியின் அரைப்பங்கு உயரத்தையும் பெறுவர். முதல் இருவருடமும் வளர்ச்சியும் கற்றலும் மிக விரைவாக ஏற்படுவதோடு குழந்தையின் உருவவியல் மாற்றங்களோடு உடலியல் ரீதியாகவும் விகிதாசார அடிப்படையில் மாற்றங்கள் நிகழ்கின்றது. முதல் இருவருடத்தில் வளர்ச்சியும் கற்றலும் மிக விரைவாக இருக்கும். கட்டிளமைப் பருவம் வரை ஒவ்வொரு வருடமும் உயரத் திலும் நிறையிலும் மெதுவான வளர்ச்சிப் போக்கே காணப்படும். குழந்தையின் உருவத் தில் மாற்றங்கள் நிகழும் வேளையில் உடலின் பகுதிகளில் விகிதாசார மாற்றங்கள் ஏற்படுகின்றன.

உடல் விருத்திச் செயன்முறைகளில் நிகழ்கின்ற மற்றுமொரு மாற்றங்கள் தசைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழுப்பு, ஓமோன்கள் ஆகியவற்றில் ஏற்படுகின்றன. எலும்பு, மூளை வளர்ச்சியைப் போலன்றி சகல தசைநார்களையும் குழந்தை ஆரம்ப காலத்திலே பெற்றுவிடும். தசை இழையங்களின் அதிகரிப்பினால் தசைநார்கள் நீளத்திலும், தடிப்பிலும், வலுவிலும் மாற்றம் பெறுகின்றன. இத்தகைய வளர்ச்சி கட்டிளமைப்பருவம் வரையும் இடம்பெறுவதினால் உடலியக்க வளர்ச்சி சிறப்பாக அமையும். இப்பருவத்தில் ஏற்படும் உயரம், நிறை போன்ற அளவு ரீதியான அளவைகள் மூலம் இதனையறியலாம்.

பிள்ளைகளின் ஆரம்பநிலை உடலியக்க வளர்ச்சி பற்றி ஆசிரியர் அறிந்திப்பதானது அவசியமாகும். முன்பள்ளியிலே பல்வேறுபட்ட பின்புலம் கொண்ட பிள்ளைகளின் கற்றல் செயற்பாடு காணப்படும். அவர்கள் வெவ்வேறுபட்ட இயல்புள்ளவர்களாகவும் உடலியக்க செயற்பாடுடையவர்களாகவும் காணப்படுவர். உதாரணமாக சில குழந்தை நல்ல சுறுசுறுப்பாக காணப்பட சில குழந்தைகள் சுறுசுறுப்பற்று காணப்படுவர். இவ்வாறு வேறுபாட்டு நிலையை ஆசிரியர் அறிந்து கொண்டு தீர்வுகளை வழங்குவது இன்றியமையாததாகும். சிறந்த எடுத்துக் காட்டாக முன்பள்ளிக்குழந்தைகளை குழுக்களாக்கி ஓட்டப்பந்தயம், சறுக்கல், நீச்சல், நடனம், உடற்பயிற்சி போன்ற பல்வேறுபட்ட செயற்பாடுகளை ஆசிரியர் வழங்குவது பொருத்தமுடையதாக அமையும்

**இயக்கத்திறன்களின் வளர்ச்சி**

இயக்கத்திறன்களின் வளர்ச்சியானது இப்பருவம் பிறப்பில் எதிர்நோக்க வேண்டியிருக்கும் சகல சூழற்றாக்கத்திலிருந்தும் விடுபடுவதற்கான மாற்றங்களைப் பெறுகிறது. ஆரம்பநிலை சீராக்கத்தின் பின்பு பிள்ளையின் வளர்ச்சி துரிதமடையும். முதிர்ச்சியுடன் கூடிய நரம்புத்தசைப் பயிற்சியும் இயக்கச் செயற்பாடுகளுடன் இயைவடைகிறது. உளவியலாளர்கள் இயக்க வளர்ச்சியென்பது பிள்ளையின் அசைவிலும் நடத்தையிலும் ஏற்படும் சிக்கலான மாற்றமே என்கின்றர். குழந்தைகளின் இயக்கத்திறன் வளர்ச்சியிலே பல சிக்கலான பருவங்கள் உண்டாகிறது.

தன்னிச்சையான அடிப்படைத்திறன்களிலே காணப்படும் ஒன்றிணைதலும் இயைபாக்கமும் காரணமாக படிப்படியாக ஏற்படும் சிக்கலான திறன்களுடன் வளர்ச்சியின் தொடர்ச்சியான நிகழ்வு இணைந்து செல்லும் போது இவ்வாறான பிரச்சினைக்குரிய பருவம் ஏற்படுகிறது. இதனுள் குழந்தைகள் திறன் தேர்ச்சியடையும் காலப்பகுதியுமுண்டு. பிள்ளையானது உடல், புலக்காட்சி, நுண்ணறிவு ரீதியாக தொழிற்பட போதிய முதிர்ச்சியும் ஏற்படுகின்றது. குழந்தைகளின் இயக்கத்திறனை கட்டுப்படுத்த விளையும் போது அதன் ஏனைய திறன் விருத்தியையும் இழக்க நேரிடும். இருப்பினும் பிள்ளைகளின் இயக்கத்தில் சில குறைபாடுகள் காணப்படுவது பொது நிகழ்வாகும் இதனை நிவர்த்தி செய்ய பல்வேறு வழிகள் காணப்படுகின்றன. இயக்கத்திறன் விருத்தியை மேற்கொள்ள வெறுமனே பிள்ளைகளுக்கு எழுத்துப் பயிற்சிகளை மட்டும் மேற்கொள்ளாமல் பிள்ளையின் மூளை, தசைநார்கள் போன்றன சிறப்பாக செயற்படக்கூடிய வகையிலான நீச்சல், ஆடல், பாடல், கண்கட்டி விளையாடல், ஊஞ்சலாட வைத்தல், மண்ணில் விளையாட வைத்தல் போன்ற பல்வேறு செயற்பாடுகளில் பிள்ளைகளை ஈடுபடுத்தி அவர்களின் இயக்கத்திறனை விருத்தியடையச் செய்தல் ஆசிரியரின் பொறுப்பாகும்.

**புலனுணர்ச்சிகளின் வளர்ச்சி**

குழந்தைகளுக்கு புலனுணர்ச்சி சிறந்த வகையில் இடம் பெறல் இன்றியமையாததாகும். அதனடிப்படையில் குழந்தை பிறந்தவுடன் அதன் ஐம்புலன்களால் சூழலியல் மாற்றங்களை உணர முடிகிறது. அதாவது கட்புல விருத்தியில் கண்பார்வைக்கூர்மை மிக முக்கியமானது. ஏனெனில் குழந்தை கண்ணால் பார்ப்பதனையே கைவழியாக வெளிப்படும். கண்களால் காணும் விடயங்களை பிள்ளை கைகளால் செயற்படுத்த முயற்சிக்கும். பிறந்த குழந்தையால் எட்டு அங்குல தூரத்திலுள்ள பொருட்களின் மீது பார்வையை செலுத்த முடியும். இரண்டு மாதமளவில் குழந்தையின் பார்வை துரிதகதியில் கூர்மையாவதுடன் பொருட்களை அடையாளம் காணவும் வலிமை பெறுகிறது. இது இனங்காணல் திறனில்முதல் முயற்சியாகும். குழந்தைக்கு ஆறுமாதமாகும் போது புலக்காட்சி பற்றிய தெளிவான அறிவைப் பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த குழந்தை யாருமில்லாத நேரத்தில் திடீரென விழித்தால் அதிலிருந்து தானாக வெளியேற முயற்சிக்காது. இதிலிருந்து புலக்காட்சி விருத்தியடைந்துள்ளது எனலாம். கட்புலவிருத்தியானது அப்பருவத்தில் உண்டாகும் அறிவு விருத்தியின் விளைவேயாகும். பியாஜே இரண்டு வயது வரையுள்ள இப்பருவத்தினையே அறிவுவளர்ச்சியின் புலனியக்கப் பருவம் என்கிறார். அத்தோடு கேட்டல் திறன்விருத்தியையும் பெற்றுக் கொள்கிறது. குரல் முகம் ஒலி வேறுபாடுகளை இனங்காண்பதோடு அதனூடாக நபர்களை இனங்காணல் என்பன வளர்ச்சியடைகிறது

பிள்ளையை சிறந்த வகையில் வழி நடாத்தி முன்பள்ளிச் செயற்பாட்டில் விருத்தியை ஏற்படுத்த ஆசிரியருக்கு பிள்ளையின் புலனுணர்ச்சி தொடர்பான அறிவு இன்றியமையாததாகும். ஏனெனில் மீத்திறன் கூடிய பிள்ளைகளும் குறைந்த பிள்ளைகளும் வகுப்பறையில் காணப்படுவர். அவரவர் திறன்களுக்கேற்றாற் போல் கற்பித்தலை மேற்கொண்டு அனைத்து பிள்ளைகளிலும் முழுமையான விருத்தியை ஏற்படுத்துவதே ஆசிரியரது இலக்கு. அந்த வகையில் புலனுணர்வினூடாக பிள்ளைகளை விருத்தியடையச் செய்யலாமெனின் வர்ணப்படங்கள், உருக்களை இனங்காணல், வித்தியாசங்களை இனங்காணல், சிறுவர்பாடல்கள், சிறுவர் தொடர்பான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை காண்பித்தல் இயற்கைச்சூழலுக்கு அதாவது வண்ணப் பூங்காக்கள் போன்றவற்றிற்கு பிள்ளைகளை அழைத்துச் சென்று அதனை அங்குள்ள இயற்கைக்காட்சி ஒலிகள் போன்றவற்றை அவதானிக்கச்செய்தல் போன்றவற்றினூடாக முன்பள்ளிவிருத்திச் செயற்பாட்டினை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியும். எனவே பிள்ளையின் புலனுணர்ச்சிசார் விருத்தி தொடர்பான அறிவினை அடிப்படையாகக் கொண்டு முன்பள்ளிச் செயற்பாட்டில் சிறந்த விருத்தியை ஏற்படுத்தலாம்.

**சமூக - மனவெழுச்சி வளர்ச்சி**

வகுப்பறை கற்றல் கற்பித்தலை சிறந்த வகையில் கொண்டு செல்ல பிள்ளைகளின் சமூக-மனவெழுச்சி பற்றிய அறிவும் ஆசிரியருக்கு இன்றியமையாதவொன்றாகும். குழந்தையின் சமூக-மனவெழுச்சி வளர்ச்சிகள் பெருமளவில் முதிர்ச்சியிலும் சூழலிலுமே தங்கியுள்ளது. பெற்றோர் பிள்ளைகளில் அன்பு செலுத்தும் போது பிள்ளைகள் அதனையொரு பாதுகாப்பான இடமாகவே உணருவர். பெற்றோரிடமிருந்து நல்ல தொடர்பை பெறமுடியாது போகுமிடத்து குழந்தைகள் சமூகமயமாதலுக்குட்படாமல் பாடசாலையிலும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுவர். இப்பிள்ளைகள் சில நேரங்களில் தம்மால் கட்டுப்படுத்த முடியாத கோபத்தினை வெளிக்காட்டும் போது ஆசிரியர்கள் அவர்களை தண்டிக்காமல் வேறு ஏதாவது விடயங்களினூடாக அவர்களை திசை திருப்பி மனமுறிவைத் தவிர்க்க வேண்டும்

இப்பருவத்தில் அவர்களின் மனவெழுச்சி தற்காலிகமானதாகவே இருக்கும். பெற்றோரால் மனவெழுச்சியின் போதான சந்தர்ப்பங்கள் சரியாக கையாளப்படாவிட்டால் பிள்ளைகளிடையே உளவியல் பாதிப்புக்களும் ஏற்படலாம். குழந்தை பிறந்து சில வாரங்களில் தாயுடனும் அதனைத் தொடர்ந்து குடும்ப உறுப்பினர்களுடனும் இன்னும் சில காலத்திற்குப் பின் ஒத்த வயதினர் ஆகியோருடனும் இணைந்து செயற்பட முயற்சிக்கும் போது சமூகமயமாதலுக்குட்பட்டு சமூகத்துடன் இணைந்து செயலாற்றும் மனநிலையைப் பெறும். இவ்வாறு சிறந்த சமூகமயமாதல் பண்பினை பிள்ளையிடத்து வளர்க்க ஆசிரியருக்கு இடமுண்டு. இதனை அறிந்து பிள்ளையின் முன்பள்ளிச் செயற்பாட்டினை சிறப்பாக திட்டமிட முடியும். இவ்வறிவோடு பிள்ளைகளை குழுச்செயற்பாடுகளில் ஈடுபடச் செய்தல் அதாவது குழு விளையாட்டு, நடனம், உரையாடல்கள் கைகுலுக்கல்கள் போன்ற வற்றின் மூலம் பிள்ளைகளை சமூகமயமாக்குவதோடு பிள்ளைகளிடையே அன்பு, பாசம், ஒற்றுமை, விட்டுக்கொடுப்பு போன்ற நற்பண்புகளை விருத்தியடையச் செய்ய முடியும்.

**மொழி வளர்ச்சி**

மொழிவளர்ச்சியானது குழந்தைகள் தமது கருத்துக்களை வெளிப்படுத்தவும் பிறரின் கருத்துக்களை செவிமடுக்கவும் இன்றியமையாத ஒரு திறனாகக் காணப்படுகிறது. குழந்தையானது சூழலை அறிந்து கொள்ள


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும் பொருட்கள் செயல்கள் ஆகியவற்றின் பெயரை அறியும் போதே சூழலை புதிய அமைப்பில் நோக்குகிறது. மொழி மூலம் தன்சூழலைப்பற்றி பேசவும் சிந்திக்கவும் மொழியினூடாக முனைகிறது. மொழிமூலம் பிறதொடர்புகள் விரிவடைந்து சூழல் பற்றிய விளக்கமும் கிடைக்கிறது.

மொழி வளர்ச்சியடைய சமூகவகுப்பு முக்கிய காரணமாக இருக்கின்றதென பேர்ணஸ் ரீன் குறிப்பிடுகிறார். முதிர்ச்சி, பயிற்சி இரண்டும் மொழிவளர்ச்சிக்கு வேண்டியனவாகும். குழந்தைகள் ஆரம்பத்தில் பல்வேறுபட்ட ஒலிகளை எழுப்புவதுடனும் குடும்ப அங்கத்தவர்கள் மூலம் எழுப்பப்படும் ஒலிகள் மூலமும் தனது மொழிவிருத்திக்கு தேவையான அறிவைப் பெறுகிறது. எனினும் பத்துமாதமளவிலேயே பாவனை செய்யத் தொடங்குகிறது. ஒருவருடத்தின் பின் குழந்தை கையாளும் சொற்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும். எனினும் ஒன்றரை வருடங்களின் பின் கையாளும் சொற்களின் எண்ணிக்கை துரிதகதியால் அதிகரிக்கும்.

ஐந்து வயதளவில் சுமார் 5000 சொற்களை கையாளும் திறனைப் பெற்றுக் கொள்வர். ஒரு சொல்லிலிருந்து 6 அல்லது 8 சொற்களை கொண்ட வசனங்களை பாவிக்கு மளவிற்கு மொழிவளர்ச்சியடையும். மூன்று வயதாகும் போது தன்மயமான விடயங்களைத் தவிர்த்து சூழல்சார் விடயங்களை பேச எத்தனிக்கும். இந்நிலையில் பேசவும் தன் கருத்தை பரிமாறவும் பிறர் கருத்தை ஏற்கவும் பழகும். நுண்மதியானது மொழிவிருத்தியில் அதிக பங்குவகிக்கிறது. குறைந்த நுண்மதி யுடைய குழந்தைகள் தாமதமாகவே பேசத் தொடங்குவர். குடும்பத்தில் அங்கத்தவர் குறைந்த எண்ணிக்கையில் காணப்படல் தனித்த சூழல் போன்றன பிள்ளைகள் தாமத மாகப் பேசக்காரணங்களாகவும் அமையும். தொலைத்தொடர்பு சாதனம், பத்திரிகை, சஞ்சிகை, குடும்ப அங்கத்தவர்கள் அதிகமாகக் காணப்படல் என்பன பிள்ளையின் மொழி விருத்தியை துரிதப்படுத்தும். பெற்றோர் குழந்தைகளுடன் தொடர்ந்து மழலை மொழி யில் பேசுவதனைத் தவிர்க்க வேண்டும்.

குழந்தை வளர்ச்சி தொடர்பான அனுபவத்தினூடாக எவ்வாறு மொழி விருத்தியை ஏற்படுத்தலாமெனின் குழந்தை களை தமக்கிடையே உரையாட விடுதல், ஆசிரியர் பிள்ளைகளுக்கு இடையேயான உரையாடலின் மூலம் அதிக அறிவு வளர்க்கப் படுகிறது. சமவயதுக் குழுக்களுக்கிடையே ஆசிரியர் பாடி கதைகளைக் கூறிவிட்டு அதனைக் குழந்தைகளிடம் செய்து காட்டும் படி தூண்டுதல், சந்தைகள் பொருட்காட்சிகள் நடாத்தி பொருட்களின் பெயர்களை கூவி விற்கச்செய்தல், படம் பார்த்து கதை கூறச் செய்தல், வர்ணப்படங்களை காண்பித்து அதன் பெயர்களை உச்சரித்துக் காட்டல், குழந்தைகளுடன் மழலை மொழியில் பேசாமல் சிறந்த உச்சரிப்பை உச்சரித்தல் இயற்கை ஒலிகளை கேட்க வைத்தலும் அதனைப் போல ஒலியெழுப்ப கற்றுக் கொடுத்தலும் எல்லா மொழிகளிலும் கற்பித்தல் அதாவது சிறுசிறு சொற்கள் வசனம் போன்றவற்றை கற்பித்தல் போன்ற செயற்பாடுகள் மூலம் மொழிவிருத்தி ஏற்படுத்தலாம் இவ்வாறு செய்தல் ஆசிரியரின் இன்றியமையாத பணியாகும்.

**ஆரம்ப அறிவு வளர்ச்சி**

அறிவுசார் வளர்ச்சி பற்றிய அறிவும் வெற்றிகரமான முன்பள்ளி ஆசிரியருக்கு இன்றியமையாததாகும். அறிவுசார் எனும் சொல்லானது அறிவு, ஞாபகம், நினைவு, பிரச்சினைகளைத் தீர்த்தல் எண்ணக் கருக் களை சிந்தித்தல் போன்ற அறிவாற்றலுக்குரிய அம்சங்களை உள்ளடக்கியிருக்கும். அதனை ஏனைய வளர்ச்சிகளை இனங்காண்பது போன்று இனங்காண்பது இலகுவானதன்று. இது தொடர்பான ஆய்வுகளை சுவீடன் நாட்டைச்சேர்ந்த பியாஜே எனுமறிஞர் "The psychology of Intelligence" எனும் நூலில் தகவல்களை முன்வைக்கிறார். தனது மூன்று பிள்ளைகளையும் முப்பது வருடங்கள் அவதானிப்பு சிகிச்சை முறைகளில் "Clinic method" ஆய்வுசெய்து அறிவுசார் கொள்கையை முன்வைத்தார். அறிவுசார் விருத்திச்செயன்முறையில் முதலிரு வருடங் களிலேயே சூழலுக்குரிய தூண்டிகள் பெறும் முக்கியத்துவத்தை முதலில் எடுத்துக் காட்டியவராவார். 3-4 வயதுகளிலேயே ஏறக் குறைய 50% நுண்ணறிவு வளர்ச்சி பிள்ளை களிடையே ஏற்படுகிறது என உளவியலாளர் கள் குறிப்பிடுகின்றனர். இது வேறெந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவத்திலும் ஏற்படுவதில்லை. எனவே இக்காலப்பகுதியில் பெற்றோர்கள் சிறந்த நுண்ணறிவு விருத்திக்கான அத்திவாரத்தை பிள்ளைகளுக்கிட வேண்டும். இது அவர்களின் எதிர்காலத்திற்கு பேருதவியாக அமையும்.

ஆரம்ப அறிவு விருத்தி தொடர்பாக ஆசிரியர் அறிந்திருப்பது முக்கியமானதாகும். குழந்தைகளின் அறிவு, நினைவாற்றல், ஞாபகம் எவ்வாறு வளர்ந்துள்ளது, எவ்வாறு அறிவு விருத்திக்கு உதவலாம் போன்ற திட்டமிடல்களைக் கொண்டிருக்க வேண்டும். முன்பள்ளி ஆசிரியரானவர் அனுபவத்தினூடாக அறிவை ஊட்டும் போது புதிர்கள், விடுகதைகள் போன்றவற்றைக் கேட்டல் விரல்கள், கட்டைகள் புளியம் விதைகள் போன்றவற்றைக் கொண்டு எண்ணுதலில் ஈடுபடுத்தல், படங்களுக்கு நிறந்தீட்டச் செய்தல், சூழலிலுள்ள கழிவுப் பொருட்களை வைத்து ஆக்கங்களை செய்ய வைத்தல், தேங்காய்ப்பூ, சணல், பஞ்சு, பருப்பு, மரத்தூள், போன்றவற்றைப் பயன்படுத்தி ஆக்கங்களை செய்ய வைத்தல், நினைவாற்றலை அதிகரிக்கச் செய்ய பிள்ளையை கடைக்கு அனுப்பி சில பொருட்களை வாங்கி வரச் செய்தல், குறிப்பிட்ட பொருட்களைக் கொடுத்து வித்தியாசங்களை இனங்காணச் செய்தல். சிறிய, பெரிய வித்தியாசமான உருக்களை இனங்காணச் செய்தல், பிள்ளைகள் கேட்கும் கேள்விகளுக்கு சலிப்படையாமல் பதிலளித்தல், உருவங்களை வடிவமைத்தல் பிரச்சினையின் போது குழந்தையுடன் உளப்பூர்வமாக உரையாடி தீர்வைக் காண வைத்தல் போன்றவற்றை மேற்கொள்வது சிறப்பான செயற்பாடுகளாகும். இக்கருத்தையே ருசோ வலியுறுத்துகிறார். முன்பள்ளி ஆசிரியர் பிள்ளையின் சிந்தனையை தூண்டும் விதமாக கேள்விகேட்க வேண்டும் அதனூடாக அவர்களிடமிருந்தே பதில்களைப் பெறவேண்டும். உதாரணமாக கிளியின் நிறமென்ன? அது எவ்வாறு குரலெழுப்பும் போன்ற வினாக்களைத் தொடுத்து அவர்களிடமிருந்து விடைகளைப் பெறவேண்டும். இதனூடாக நுண்ணறிவை வளர்க்க கூடியதாக அமையும்.

**முடிவுரை**

முன்பள்ளி ஆசிரியர் தன்னிடம் வரும் குழந்தைகளை அவர்களின் தன்மைகளை இனங்கண்டு அவர்களின் வளர்ச்சிக்கட்டம் பற்றிய அறிவுடன் வகுப்பறை கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை சிறந்த முறையில் ஒழுங்குபடுத்தல் அவசியமாகும் ஏனெனில் "நிகழ்கால வகுப்பறைகளே எதிர்கால தலைவர்களை தீர்மானிக்கின்றன." இவ்வாறான அறிவு அனுபவத்தூடான கற்பித்தலில் ஈடுபடலானது பிள்ளைகளின் முன்பள்ளிச் செயற்பாட்டில் சிறந்த விருத்தியை ஏற்படுத்தும்.

பிள்ளைகளின் கற்றல் செயற்பாடுகளில் விருத்தியை ஏற்படுத்துவதற்காகவே muR Methods of teaching, smart classes, play schools, early chilhod education, pre-school courses போன்றவற்றினை ஏற்படுத்தியும் நடைமுறைப் படுத்தியும் வருகின்றது. ஆசிரியர்களுக்கு சுதந்திரமாக கற்கக்கூடிய சூழலை ஏற்படுத்தி இருப்பதோடு 2017ம் ஆண்டின் ஆசிரியர் தினத்தின் தொனிப்பொருளாக "கற்பித்தலில் சுதந்திரம், ஆசிரியர்களை வலுப்படுத்தல்" என்பன அமைந்திருந்தது. அதன் நோக்கமாக பிள்ளைகளின் கல்வி விருத்தியே அடிப்படையாக்கப்பட்டுள்ளது. எனவே பிள்ளையின் வளர்ச்சிபற்றிய பூரண அறிவுடன் கற்றல் -கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடலானது சிறந்த முறையில் முன்பள்ளி பிள்ளைகளிடையே விருத்தியை ஏற்படுவதோடு நவீன சூழலுக்கேற்றவாறு ஆற்றலும் ஆளுமையுமுள்ள இளைய தலைமுறையினரின் உருவாக்கத்திற்கு அத்திவாரமிட முடியுமென்பதில் சிறிதேனும் ஐயமில்லை.

உசாத்துணைகள்

1. அருள்மொழி, செ. (2010). பிள்ளை வளர்ச்சியும் கற்றலும். மட்டக்களப்பு: எவகிறின் அச்சகம்

2. கணபதி,க. (1993 ). கல்வி மனவியல் துணையியல். இந்தியா: சாந்தா பப்ளிசர்ஸ்

3. கணபதி,வி. (1993). கல்வி உளவியல். இந்தியா: சாந்தா பப்ளிசர்ஸ்

4. கருணாநிதி, மா. (2008). கற்றல் கற்பித்தல் மேம்பாட்டுக்கான வழிமுறைகள். கொழும்பு: சேமமடு பதிப்பகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வகுப்பறை முகாமைத்துவ எண்ணக்கரு**

வகுப்பறை முகாமைத்துவம் என்பது, மிக எளிதாக குறிப்பிட்டால் சிறந்த முறையில் ஒழுங்கமைக்கப்பட்டதும், பயனுள்ளதுமான ஒரு வகுப்பறையை நடைமுறைப்படுத்துவதாகும். இவ்வகுப்பறையிலே ஒவ்வொரு மாணவனுடைய திறமையையும் விருத்திசெய்து கொள்வதற்குத் தேவையான சந்தர்ப்பமளிக்கப்படும். கற்றல் வழிகாட்டி என்ற வகையில் ஆசிரியர்களுக்கு தன்மீதுள்ள பொறுப்பை நிறைவேற்ற முடியும். தன்னுடைய நடத்தைகளை தானே சீரமைத்துக் கொள்ளக்கூடிய வழிமுறைகளை கருத்துள்ளதாயும், விருப்போடும் பெற்றுக்கொள்வதற்கு மாணவர்களுக்கு சந்தர்ப்பங்கிடைக்கும். அத்தகைய வகுப்பறையின் மாணவர்களும் ஆசிரியர்களும் குறிப்பிட்ட நடத்தை மட்டங்களின் தகுதி பற்றி அறிந்திருப்பார்கள். அதனால் அந்நடத்தைகளை நடைமுறைப்படுத்துவது பற்றி ஒற்றுமையாக வேலை செய்வார்கள். பொதுவாக அத்தகைய வகுப்பறையொன்றை நோக்குகையில் ஆசிரியரினதும் மாணவரினதும் மிக விருப்பமான சூழல் அங்கு அமையும் எனக் கொள்ளலாம்.

அவ்வாறமைவது:

1. தனது தொழில் நிறைவையும் (Professinal Fulfilment) தொழில் திருப்தியும் (Job satisfaction) பெற்றுக் கொள்வதற்கு ஆசிரியருக்கு சந்தர்ப்பங்கிட்டுகின்றமை யாலும்.

2. தனது நடவடிக்கைகளைத் தொடர்ந்து செயற்படுத்துவதற்கும் கற்றல் தொடர்பானதும் தனிப்பட்டதுமான சிரமங்களின்போது உதவியைப் பெற்றுக்கொள்ளத் தகுந்த சூழ்நிலையில் வசிப்பதற்கும் மாணவர்களுக்கு இடமளிக்கப்படுகின்றமையினாலுமாகும். அவ்வாறு சிறந்த முகாமைத்துவத்துக்குட்பட்ட வகுப்பறையின் உயர்ந்த விளைவு தன் நடத்தை பற்றி தானே பொறுப்பேற்கும் ஜனநாயகரீதியானதும் அறிவுசார் தீர்மானங்களை எடுக்கும் செயன்முறைக்கு மாணவர்களை இட்டுச் செல்லக்கூடியதுமாகும். வகுப்பறை முகாமைத்துவத்தின் பிரதான பணி ஆசிரியர் அதிகாரத்தை நிலைநாட்டுவ தல்ல. அத்தகைய அதிகாரத்தை நிலைநாட்டு வது தேவையற்றது என்ற நிலைக்கு மாணவர்களை இட்டுச்செல்வதாகும்.

பண்பட்ட முகாமைத்துவத்தின் ஊடாக செயல்பற்றியும், நிலைபேறு பற்றியும் ஒரு கட்டமைப்பும் வரையறையும் உருவாக்கப்படுகிறது. அத்தகைய கட்டமைப்புகளையும், வரையறைகளையும் அறிந்து கொள்வதனாலும் ஏற்றுக் கொள்வதனாலும், மிகைப்படுத்துவதனாலும் அவற்றை தனது தனிப்பட்ட வாழ்க்கையின் போது பின்பற்ற முடியும். பொருத்தமான துறைகளின் கட்டமைப்பும், வரையறைகளும் ஏற்படும் போது ஏனைய துறைகளில் அபிவிருத்திக் கான சந்தர்ப்பம் அதிகரிக்கும். உதாரணமாக வகுப்பறையை முறையாக வைத்திருத்தல் தனது அன்றாட வாழ்க்கையை சீராக அமைத்துக் கொள்ளத் தூண்டுகோலாகிறது. வாய்மொழி நடத்தையின் வரையறைகளை அறிந்திருத்தல் சமூகத்திலே பண்பாக பேச்சு வார்த்தை நடத்தும் பழக்கத்தை நிலைபெறச் செய்யும்.

வகுப்பறை முகாமைத்துவம் என்பதை மேலும் இலகுப்படுத்தி கூறுவாதாயின் ஒவ்வோர் ஆசிரியரும் கற்றல் நடத்துவதற்கான தனது உட்புகுதலை ஒழுங்குபடுத்துவதும் அதற்கு ஏற்றவாறு வகுப்பறை சூழலை ஒழுங்கமைக்கும் முறையுமாகும்.

சீரான முகாமைத்துவத்தினால் வகுப்பறையினுள்

*என்ன நடைபெறுகின்றது என்றும்

*தன்னிடமிருந்து என்ன எதிர்பார்க்கப்படுவதென்பதையும் பற்றி

மாணவர்களுக்கு சிறந்த ஓர் மனப்படத்தை பெற்றுக்கொடுக்க முடியும். அதே போன்றதனது நடத்தைகளின் தொடர்ச்சியான பிரதி பலன்களையும் கண்டு கொள்ளவும் முடியும். வகுப்பறை நன்முகாமைத்துவத் தினால் ஆசிரியர்கள் தமது நடவடிக்கை களைப்பற்றி தெளிவான முறையில் சிந்திக்கும் சந்தர்ப்பம் பெறுவார். தனது கற்பித்தல் வேலை ஒருங்கிணைப்பு

# வகுப்பறை முகாமைத்துவ கோட்பாடுகள்

பொன்.இராமதாஸ்,

விரிவுரையாளர், கல்விப்பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தளவு வெற்றிகர மானது என்பதை மிகவும் செம்மையாக அறிந்து கொள்வர். ஆகவே அவற்றைப் பொருத்தமான விதத்தில் மாற்றியமைத்துக் கொள்ளவும் அவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும். இவ்வாறு வகுப்பறை முகாமைத் துவம் முக்கியமானதாயினும் அதைப் பற்றியோ பாடசாலை ஒழுங் கமைப்பிலும் வகுப்பறை முகாமைத்துவத் திலும் அதனை பயன்படுத்துதல் பற்றியோ அண்மைக் காலம் வரை இந்நாட்டில் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை என்பதைக் கூற வேண்டும். எனினும் ஒரு வகுப்பறையை சிறந்த விதத்தில் நடத்துவது ஆசிரியரது பொறுப்பே யாதலினால் அதைப் பற்றி விசேட கவனம் செலுத்த வேண்டியது அவசியம் என இங்கு உரைக்கப்பட்டுள்ளது.

**தற்கால வகுப்பறைகளின் தன்மை**

இங்கு பொதுவாக அவதானிக்கும் போது வகுப்பறையினுள் காணப்படும் நிலைமைகள் பல சந்தர்ப்பங்களில் அதிருப்தி தருவதாக உள்ளது. முக்கியமாக வகுப்புகளின் பௌதீகச் சூழல் அதிருப்திகரமானது எனலாம். அதாவது பெரும்பாலும் பிரிக்கப் படாத வகுப்பறைகள், வகுப்பறைத் தள பாடங்கள், கரும்பலகை, வெண்கட்டி, உப கரணம் இடவசதி ஆகியனவும் அதிருப்திகர மான தோற்றத்தை தருகின்றன. அத்துடன் மாணவர்களை வழிநடத்துவதில் புதுப்புது சிரமங்களும் தோன்றியுள்ளன. அவர்கள் எளிதில் கோபமுறுபவர்களாகவும், அதிக ஆக்கிரமிப்புத் தன்மையுடையோராயும் காணப்படுகின்றனர். சமூக ஸ்திரமின்மையே இதற்குக் காரணமாகும். மாணவர் குழக் களிடையே வேற்றுமைகள் அதிகரித்துள்ளன. இதனாற் இவர்களை இலகுவில் புரிந்துணரச் செய்ய முடிந்துள்ளது. நவீன பொருளாதார நிலைமைகள் (வருமானம் அதிகரித்தல் முதலிய) மாறிவரும் சமூக நிலைமைகள் (தாய்/ தந்தையர் மத்திய கிழக்குச் செல்லுதலும், திரும்பி வருதலும்) போன்றவை, நவீன தொடர்பு சாதனங்கள் (தொலைக்காட்சி முதலிய) போன்றவை விரிவடைந்து செல்வ தாலும் பல்வகை ஆடம்பரப் பொருள்களும் நவீன அலங்கார முறைகளும் சந்தைகளில் கட்டுபாடின்றிக் காணப்படுவதாலும் பல் வேறு தரங்களிலுள்ள மாணவர்கள் மீது கடும் தாக்கத்தை ஏற்படுத்த ஆரம்பித்துள்ளன. அதனால் அவர்களது பழக்கவழக்கங்கள் அபிப்பிராயங்கள் எதிர்பார்ப்புகள் போன்ற வற்றில் சலனத்தை ஏற்படுத்துகின்றன. ஆகை யினால் பெரும்பாலும் வகுப்பில் உளவியல் சூழ்நிலைக்கு உகந்த வித்தில் சீரமைத்துக் கொள்வதில் சிரமம் ஏற்படுகின்றது. எனினும் இன்றும் வகுப்பறையே முக்கிய பாத்திரம் வகுப்பறை முகாமைத்துவமாகுமே என்று கூறுவது மிகையல்ல.

நல்லதொரு வகுப்பறை முகாமைத் துவம் சீரான கல்விக்கு வழிவகுக்கும். அது மாணவர்களை தொடர்ச்சியான மோதல்களி லிருந்து (Conflict) தவிர்க்கும் வகுப்பினில் சிறந்த ஒழுங்கமைப்பு நிலவுமாயின் அதனால் ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையில் அந்நியோன்யமான தொடர்பு உண்டாவது திண்ணம். "நல்லொழுங்கு" (good order) ம் ஒழுக்காறு (discipline) ம் வகுப்பறையில் நிலவு மாயின் இந்நிலை உருவாக முடியும். "ஒழுங்கு: என்பது எம் அன்றாட வாழ்க்கையில் நாம் உறுதியாக பின்பற்றும் ஒன்றாகும். வகுப்பறை யினுள் மிகமிக உறுதியாக ஒழுங்குமுறைகள் பின்பற்றப்படல் வேண்டும். ஒழுங்கை ஏற்படுத்தாது நடைபெறும் கற்பித்தல் ஒரு யுத்தம் போன்று அமையும். அத்தகைய ஓர் சந்தர்ப்பத்தில் ஆசிரியர் கடுமையாக களைப் புறுவார். மாணவர் முறைகேடாக நடந்து கொள்வர். எவ்வாறாயினும் விமர்சனத்துக்கு ஆளாகுபவர் ஆசிரியரே.

வகுப்பறை முகாமைத்துவத்தை வெற்றிகரமாகச் செய்வதற்கும் அதன் மூலம் பயனுள்ள வகையில் கலைத்திட்ட வேலை களை செய்து முடிப்பதற்கும் ஓராசிரியன் கட்டாயமாக வகுப்பு முகாமைத்துவ சூழ் நிலையை விளங்கிக் கொள்ளவேண்டும். இந்த சூழ்நிலையை விளங்கிக் கொள்ள வேண்டும். இந்த சூழல் இரு பகுதிகளைக் கொண்டது. அவையாவன:

1. வகுப்பறையின் பௌதீக சூழல்.
2. வகுப்பறையின் சமூக சூழல்

**வகுப்பறையில் பௌதீகச் சூழ்நிலை**

வகுப்பறையில் சீரான பௌதீகச் சூழலை ஏற்படுத்தும் நடைமுறைப்படுத்துவ தும் வெற்றிகரமாக வகுப்பறை முகாமைத்து வத்துக்கு இன்றியமையாததாகும். இங்கு வகுப்பறையின் பௌதீக சூழல் என நாம் கருதுவது வகுப்பறையின் பௌதீக பொருட் களை முறையாக வைத்துக்கொள்வதனால் ஏற்படுத்திக் கொள்ளும் சூழலாகும்.

**1. வகுப்பறைக் கதவு**

சுவர்களினாற் பிரிக்கப்பட்ட வகுப் பறையொன்று இருக்குமாயின் முதலில் அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதவுகள் ஒலியெழுப்பாதவாறு கதவுகளைத் திறக்கவும் மூடவும் கூடியவாறும், திறக்கும் போது மூடும்போதும் வேறு வேறு பொருட்களில் மோதாதவாறும் அமைத்தல் அவசியம். கதவு வகுப்பறையின் பெயர் பலகையைத் தாங்கியிருக்கலாம்.

**2. தளபாடம்**

வகுப்பறையினுள் கதிரை, வாங்கு, மேசை போன்றவற்றை ஒழுங்காக வைத்திருத்தல் மிக முக்கியமாகும். அது கற்றலுக்கு ஆதாரமாக அமைவதுடன் முகாமைத்துவ சூழ்நிலையை வலுவுள்ளதாக்கவும் உதவும்.

**3. ஆசிரியர் மேசை**

எல்லா மாணவர்களுக்கும் தென்படக் கூடியதாக ஆசிரியர் மேசையை வைப்பதோடு எல்லா மாணவரும் இலகுவில் வரக்கூடிய வாறும் வைக்க வேண்டும்.

**4. மாணவர் மேசை, கதிரை**

இவற்றை ஒழுங்காக பேணல் மிக முக்கியம். மேசை, கதிரைகளை எவ்வாறு வைத்திருக்க வேண்டுமென்று நிச்சயிக்கப் பட்ட முறையொன்றில்லை. பாடத்துக்குப் பொருத்தமான விதத்தில் ஒழுங்கமைத்துக் கொள்ளத்தேவைப்படும். இது ஒரு கஷ்ட மான காரியமாகும். ஒரு மாணவனுக்கு தனி யாக வேலை செய்வதற்கு போதுமான இட வசதி ஏற்படும் விதத்திலும் குழு வேலைகளில் ஈடுபடுவதற்கு வசதியான விதத்திலும் மேசை கதிரைகளை ஒழுங்குசெய்து கொள்வது மிகவும் சிரமமாகும்.

**5. கரும்பலகை**

வகுப்பறையினுள் கரும்பலகையை முறையாகவும் சுத்தமாகவும், தெளிவாக எழுதக்கூடியவாறும் வைத்துக்கொள்ளுதலும் பாடத்தின் வெற்றிக்கும் பௌதீகச் சூழலை சீரமைத்துக் கொள்வதற்கும் காரணமாயமை யும். ஆகவே ஆசிரியர் அதைப் பற்றியும் விசேட கவனமெடுத்தல் வேண்டும்.

**6. ஏனைய பொருட்கள்**

வகுப்பறையினுள் சுவரில் தொங்க விடப்பட்டுள்ள அறிவித்தல், தேசப்படம், பத்திரங்கள், விளம்பரம், சித்திரம், முன்னேற்ற அறிக்கை, திட்டம், சிறந்ததாயும், கவரு பவையாகவும் எவரும் பார்க்கக் கூடியதாயும் இருத்தல் வேண்டும்.

**7. சமயம் தொடர்பானவை**

வகுப்பறைகளில் சமயச் சார்பான படங்களோ அல்லது சிலைகளோ வணங்கு வதற்காக வைக்கப்பட்டிருப்பதைக் காண லாம். வணங்குவோருக்கு அல்லது இழுக்கு ஏற்படுத்தாதவாறு இவற்றைப் பேண முடியா விட்டால் வகுப்பறைகளில் அவற்றை வைக் காது விடுதல் சாலச் சிறந்தது.

**8. உடைவு சிதைவுகள் (பழுதடைந்த தளபாடங்கள்)**

வகுப்பறைத் தளபாடங்கள் சில சமயங்களில் உடைந்து சிதைந்து பழுதடைவ துண்டு. இவற்றை உடனடியாகத் திருத்திக் கொள்ள வேண்டியிருப்பதால் ஆசிரியர் அது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கை கள் பற்றி தெரிந்திருக்க வேண்டும். அதிகமாக உடைந்தும் சிதைந்தும் போகின்ற தன்மை யானது சீரற்ற ஒழுங்கமைப்பை காட்டுவ தாகும். பழுதடைந்த கதவு, யன்னல், தள பாடங்கள் தொடர்ந்து அதே நிலையி லிருத்தல் வகுப்பறைச் சூழ்நிலையின் இழிவு நிலையைக் காட்டுவதாக அமையும். அவை மாணவரது மனோநிலையும் உள எழுச்சியை யும் பாதிக்கும் என்பதில் எதுவித சந்தேகமு மில்லை. ஆகவே ஆசிரியர் அதைப்பற்றி உடன் கவனமெடுப்பது அவசிய மாகும். இது உங்களது வீட்டின் ஒழுங் கமைப்பு, பாது காப்பு, முறைமை ஆகிய வற்றைப் பேணுவ தற்கு ஒப்பாகும்.

**9. வகுப்பறை ஆவணம்**

சம்பந்தப்பட்ட ஆவணங்கள், பதிவு கள், அறிக்கைகள் போன்றவற்றை உரிய முறை யில் பாதுகாப்பாக நடைமுறைப்படுத்தல் சிறந்த முகாமைத்துவத்தினை பரதிபலிக்கும். கட்டாயமாக நீங்கள் சீராகப் பேணவேண்டிய ஆவணம் வரவுப்பதிவு இடாப்பு ஆகும். அத் துடன் வகுப்புப் பதிவுப் புத்தகம், பெற்றோர் தகவல் புத்தகம், வசதிக் கட்டண பற்றுச் சீட்டுப் புத்தகம், புள்ளிப் பதிவு புத்தகம். முன்னேற்ற அறிக்கை முதலியவற்றையும் பேணவேண்டும்.

**10. சுத்தம்**

வகுப்பறையின் சுத்தம் தொடர்ந்து பேணப்படுவது வகுப்பு முகாமைத்துவத்தின் பெறுபேறு எனலாம். அது மட்டுமன்றி அதற்கு ஒரு வழியுமாயும் அமையும். கடதாசித் துண்டுகள், தூசுப்படிவுகள், நிலத்தில் சிந்திய உணவுப் பருக்கை போன்ற வற்றினால் வகுப் பின் தரை, மூலைகள்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளபாடங்கள் முதலியன அசுத்தமடையக் கூடும். இது பற்றி எல்லா மாணவர்களது கவனமும் ஈர்க்கப்பட்டு நிரற் தர சுத்தத்தைப் பேணுவதன் அவசியம் அவர் களது மனதில் பதியச் செய்தல் வேண்டும்.

**வகுப்பறையின் சமூக, உளவியல் சூழ்நிலை**

**1.மாணவர் - ஆசிரியர் உறவைக் கட்டியெழுப்பல்**

மாணவர்களுடன் சிறந்ததும் பயனுள்ளதுமான நட்பை ஏற்படுத்திக் கொள்வது நாம் நினைப்பதை விடச் சிரமமானது. ஆசிரியர் என்ற ஒரு காரணத்தினால் மாணவர்களுடன் உறவை ஏற்படுத்திக் கொள்வது பாதகமாய மையலாம். ஏனெனில் மாணவர்கள் விரும்புகின்ற வேறு பலர் இருக்கக்கூடும். அதனால் பொறுமையையும் யுத்தியையும் கையாண்டு மாணவர்களுடன் நல்லுறவை விருத்திசெய்து கொள்வது பற்றிச் சிந்தித்தல் வேண்டும். ஒழுங்கமைப்புக்குட்பட்ட முறையான வகுப்பறை செயற்பாட்டின் மூலம் இதனை செய்ய வேண்டும். அவ்வாறு செய்கையில் இலகுவானதும் பெறுமதியற்றதும் பிரபல்யமடையச் செய்யும் முறையைச் செயற்படுத்துவதை விட ஓரளவு கடின (Strict) போக்குடன் செயற்படல் சிறந் ததாகும். "திறமையின்மையை விடக் கடினமான தன்மையை" மாணவர் விரும்புவர்.

**2. மாணவரை அறிந்து கொள்தல்**

தனது மாணவரை இனங்கண்டு கொள்வது, அவர்களை வழிநடத்துவதற்கு எதவும் வலிமையான நுட்பமுறையாகும். இதற்கு பின்வரும் விடயங்களைப் பற்றி வகனித்தல் அவசியம்.

a) மாணவர்களின் பெயர்களை அறிந்திருத்தல் மிக அவசியமாகும். அப்பொழுது குறித்த ஒரு மாணவன் தனியாக விளிக்கலாம்.

b) மாணவரை தொடர்ச்சியாக அவதானிக்க வேண்டும். அதனால் அவர்களது நடத்தை, செயல், நட்பு, பேச்சு வார்த்தை ஆகியவற்றைப் பற்றி முக்கியமான விபரங் களைப் பெற்றுக் கொள்ளலாம்.

c) மாணவரது பின்னிணி விபரங் களைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். பாடசாலை ஆவணங்களிலிருந் தும், பெற்றோரிடமிருந்தும், தகவல்களை பெறுவதன் மூலமும் மாணவருடன் பேசுவதன் மூலமும் இதனை பெற்றுக்கொள்ளலாம்.

d) மாணவர்களுடன் தனிப்பட்ட வகையில் கலந்துரையாடல் வேண்டும். அவர்களை விளங்கிக் கொள்ள அது சிறந்த முறையாகும். ஓய்வு நேரங்களில் மாணவர்கள் உங்களது வேலையில் உதவும் நேரத்தில் அல்லது அவர்களை சந்தித்த வேறோர் சந்தர்ப் பத்தில் இதனை நிறைவேற்றிக் கொள்ளலாம்.

e) பாட இணைக் கலைத் திட்டச் செயற்பாடுகள் மாணவர்களை விளக்கிக் கொள்ள, மிகச் சிறந்த ஓர் சந்தர்ப்பத்தை பெற்றும் தரும். மாணவர்களை விளங்கிக் கொண்டவுடன் அவர்களுடன் பொருத்தமான தொடர்பை உருவாக்கிக் கொண்டால் வகுப் பறை முகாமைத்துவத்தின் மிக முக்கியமான அடிப்படையைகட்டியெழுப்பியதாக அமையும்.

**3. சட்டம், சம்பிரதாயம், அன்றாட பழக்க வழக்கங்கள்**

சமூக சூழ்நிலைக்குகந்த ஓர் ஒழுக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு தேவை என சட்டத்திட்டங்களையும் அன்றாட பழக்க வழக்கங்களையும் கருதலாம். எந்தவோர் தாபனத்தினதும் நடவடிக்கைகள் அங்குள்ளவர்களின் மனநிறைவுக்கேற்ப நிறைவேறுவதற்கு தாபனத்திற்கு சட்டவிதிகள் தொகுப் பொன்றும், சம்பிரதாயமும் அன்றாட பழக்க வழக்கங்களான மரபொன்றும் அவசியம். வகுப்பறை எவ்வளவு சிறிய அளவுடையதாயிருப்பினும் அது ஆட்தொகுதியொன்றின் கூட்டாகும். அங்கு நிலவும் வரையறைகளின் காரணமாக மிகத் தெளிவான சட்ட திட்டங் களையும், சம்பிரதாயங்களையும் பின்பற்றுவது மிக அவசியமாகின்றது.

* முகமன் கூறுதல்.
* எழுந்திருத்தல்/உட்காருதல்.
* வகுப்பினுள் செல்லுதலும் வெளியேறுதலும்
* இடையில் வகுப்புக்கு வருதலும், வெளியேறலும்.
* வகுப்புச் சுத்தம்.
* வகுப்புப் பொருள்களை ஒழுங்காக வைத்திருத்தல்.
* வகுப்பு ஆவணங்களை சீராப் பேணல்
* கதவு யன்னல்களை திறத்தலும் மூடுதலும்
* கரும்பலகையை பராமரித்தல்
* வகுப்பு தளபாடங்களை கையாள்தலும் பராமரித்தலும்
* அதிதிகளை வரவேற்றல்
* ஆசிரியர்களற்ற பாடவேளையை பயனுள்ளவாறு பயன்படுத்தல்
* ஒருவரையொருவர் மதித்தல்
* மதிய உணவு உட்கொள்ளல்
* ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முகாமைத்துவ நடவடிக்கைகளும் செயற்பாடுகளும்**

1. ஒழுங்கமைபுச் செயலாகிய வகுப் பறைச் முகாமைத்துவத்தில் ஆசிரியர்களால் நிறை வேற்றப்படவேண்டிய பல்வேறு பணிகள்

* திட்டமிடல் (அன்றாட நடவடிக்கை களை, செயற்பாடுகள் முதலியன)

* ஒழுங்கமைத்தல், (நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு ஒழுங்கொன்றை அமைத்துக்கொள்ளல்)

* இணைத்தல் (வெவ்வேறு பகுதிகளின் சுத்தம், தளபாடங்களை பராமரித்தல், ஆவணங்களை நடைமுறைப்படுத்தல், ஆகிய வற்றைப் பிரித்துக் கொடுத்திருக்கையில் அந்தப் பொறுப்பை ஒன்றுதிரட்ட முடியும். அத்தகைய பொறுப்பு வாய்ந்தவர்களது குழுவொன்றை அமைத்தலும் அடிகடி கலந்துரையாடுதலும் சிறந்த ஓர் வழியாகும்)

* செயற்படுத்தல் (அடிக்கடி ஆசிரியர் களுக்கு அறிவுறுத்தல்)

* நிருவகித்தல் (ஏற்றுக் கொள்ளப் பட்ட சட்டத்திட்டங்களுக்கும், சம்பிரதாயங்களுக்கு ஏற்ப வகுப்பு வேலைகள் நடைபெறு கின்றனா எனவும், அவற்றுக்கு இயைபானதா வென அடிக்கடி மேற்பார்வை செய்தல் வேண்டும்)

* தொடர்புபடுத்தல் (மாணவருக்கு அறி விக்க வேண்டியவற்றை இலகுவில் விளங்கிக் கொள்ளக் கூடியவாறு வாய்மொழி மூலம்/ எழுத்து மூலம் அறிவித்தல் அவசியம்)

* பாதுகாப்பு (மாணவர் பாதுகாப்பு பற்றி கவனமெடுத்தல், இன்றுவோர் அத்தியாவசிய முகாமைத்துவ பொறுப்பாகும்)

* ஊட்டம் (மாணவரது உடல், உள விருத்தி பற்றியும் கவனமெடுத்தல் வேண்டும்.)

2. மேற்கூறிய முகாமைத்துவ நட வடிக்கைகளை பின்பற்றுகையில் வழிமுறைப் படுத்திக் கொள்ளவேண்டிய மாதிரிகள்.

* காலம் (எப்போது எந்தவேலையை எவ் வாறு செய்ய வேண்டுமென்பதை அறிந் திருத்தல் வேண்டும்)

* இடம் (எவ்விடத்தில் என்ன வேலை நடக்குமென்று அறிந்திருத்தல் வேண்டும்)

* ஆளணி (மாணவரையும் மற்ற ஆளணி யரையும் பற்றி விளக்கமிருத்தல் அவசியம்)

* பொருள்கள் (பயன்படுத்திக் கொள்ளக் கூடிய பொருட்களையும் தேவையான பொருட்களையும் அறிந்திருக்க வேண்டும். தேவையை நிறைவேற்றிக் கொள்ள முயற்சி யிருக்க வேண்டும்.)

* அதிகாரமும் பொறுப்பும் (தன்னிடமிருக் கும் முகாமைத்துவ அதிகாரத்தையும் பொறுப் பையும் விளங்கிக்கொள்ள வேண்டும்) (பாடசாலையின் நிர்வாக அமைப்பை தெரிந்திருத்தல் வேண்டும்.)

* பரிசளிப்பும் தண்டனையும் (அங்கீகரிக் கப்பட்டதும் பொருத்தமானதுமான தண்டனை/ பரிசு எவையென அறிந்திருத்தல்)

3. முகாமைத்துவ நடவடிக்கைகள் நிகழக்கூடிய சந்தர்ப்பங்கள்

* கற்பித்தல் நடைபெறும் வகுப்பறை
* கற்பித்தல் தவிர்ந்த வேறு நடவடிக்கைகள் நிகழும் வகுப்பறைகள்
* மாணவர்களில்லாத வகுப்பறை
* பாடசாலையின் வகுப்பறை தவிர்ந்த மற்றைய பகுதிகள்
* பாடசாலைக்கு புறம்பான, குடும்பம்
* குடும்பத்துக்கு புறம்பான, மக்கள் சமூகம்

4. முகாமைத்துவ நடவடிக்கை மூலம் அடைய எதிர்பார்க்கும் அறநெறிகள்

* பயனுள்ள நோக்க அடைவு (அதாவது ஏற்றுக்கொள்ளப்பட்ட நோக்கங்களை பயன் தரும் விதத்தில் அடைந்துக்கொள்ளல்.)

* வினைத்திறன் (நேரம், உழைப்பு, பணம் முதலியன விரயமாகாது பயன்படுத்தல்)

* மனித நேயமும், ஒற்றுமையும் (எல்லோ ரையும் கௌரவித்தலும் மக்களுக்கிடையில் ஒற்றுமையைப் பேணுதலும்)

* அமைதியான சுபாவம் (ஒருவர் குழப்ப மடைந்தவராகவோ, அமைதியற்றவராகவோ, பதற்றமடைந்தவராகவோ இல்லாதிருத்தல் அவசியம்)

* சுய வழிப்படுத்தல் (எல்லா நேரங்களிலும் ஒருவர் மற்றொருவரால் வழிநடத்தப்படுதல் கூடாது. படிப்படியாகத் தன்னைத் தானே வழி நடத்திக் கொள்ளக் கூடிய நிலை விருத்தி யடைதல் வேண்டும்.)

* சமூக ஒத்துழைப்பு (ஆசிரியர் - மாணவர் சமூகத்தினுள் நெருங்கிய ஒத்துழைப்பு விருத்தியடைய வேண்டும்)

5. முகாமைத்துவத்தில் தீர்க்கப்படு கின்ற பதட்ட நிலைகள் அல்லது மோதல்கள்

* பாடசாலைக்கும் - கலாசாரத்திற்குமிடை யிலான மோதல்கள் (பெரும்பாலும் பாட சாலையில் கட்டியெழுப்பப்படும் கலாசாரத் திற்கும் பொதுக்கலாச்சாரத்திற்கும் இடையில் மோதல் உண்டு)

* பாத்திரங்களுக்கிடையில் (ஒருவர் பல பாத்திரங்களை நிறைவேற்ற நேரும் போது அவற்றுக்கிடையில் மோதல் ஏற்படும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* ஆளுமைக்கிடையில் (ஒன்றுக்கொன்று வேறுபட்ட ஆளுமை இலட்சணம் இருக்கையில் அவற்றுக்கிடையில் மோதல் உருவாகும்.)

* குறுங்கால அல்லது நெடுங்கால நோக்கங்களுக்கிடையில்.

6. முகாமைத்துவத்தில் கவனிக்க வேண்டிய சந்தர்ப்பக் காரணிகள்

* சமுதாயத்தின் அளவு
* மாணவர் வயதும் பின்னணியும்
* சமூகத்தின் ஒருங்கிணைப்பு
* ஒழுங்கமைப்புத் தொடர்பு
* நோக்கம்
* வளங்கள் மற்றும் இடவசதிகள்

போன்றவை தேவைக்கேற்றளவில் இருத்தல்.

7. முகாமைத்துவ செயல்களின் மீது செல்வாக்குச் செலுத்தும் ஆசிரியரினதும் பாடசாலையினதும் அறிமுறை நெகிழ்வு

* செயல் சார்ந்த (ஒரே செயலைப் பற்றியே நினைக்க வேண்டுமெனும் சார்பு)

* தனிநபர் சார்ந்த (தனி நபரைப் பற்றியே நினைக்க வேண்டுமென்ற சார்பு)

* குழு சார்ந்த (தனியாட் குழு அல்லது சமூகம் பற்றிய நினைக்க வேண்டுமென்ற சார்பு)

**சிறந்த வகுப்பறை முகாமைத்துவத்தின் அடிப்படை "விதிகள்"**

1. நேரந் தவறாமை (Punctual)
2. நன்றாக ஆயத்தத்தோடு இருத்தல்
3. இயன்றளவு துரிதமாக வகுப்பை வேலையிலீடுபடுத்துதல்.
4. முழு வகுப்பினதும் பங்குபற்றுதலையும் ஒத்துழைப்பையும் வற்புறுத்த வேண்டும்.
5. சிறந்த முறையில் வகுப்பை விளித்தல்/ விழித்துப் பேசல்
6. வகுப்பறையில் நடைபெறுவனவற்றைப் பற்றி மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டும்.
7. நெருக்கடியான நிலைமைகளில் பயன்படுத்துவதற்காக உறுதியான தெளிவான வழி முறைகளை ஆயத்தம் செய்து கொள்ள வேண்டும்.
9. ஆசிரியர் அவதானத்தை நியாயமானதாக ஈடுபடுத்தல்
10. ஒப்பிட வேண்டும்.
11. பயிற்சிகளையும், வேலை ஒப்படைகளையும் உரிய நேரத்தில் பார்வையிட்டுக் கொடுத்தல்.
12. வாக்குறுதிகளை அச்சொட்டாக நிறைவேற்றுங்கள்
13. வினா எழுப்பல் பயனுறுதி மிக்கதாகும்.
14. செய்முறை வேலைகளுக்கு போதிய இடவசதி அளித்தல்.
15. இயலுமான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வகுப்பறையின் அன்றாட வேலைகளை மாணவரிடம் ஒப்படைத்தல்.
16. வகுப்பறையை பயனுறு வகையில் ஒழுங்கமைத்தல்.
17. மாணவர் பிரச்சினை பற்றி கவனித்துப் பார்த்தல்.
18. ஒரு பாடத்தை வெற்றிகரமாக முடித்து வைத்தல்.

கற்பித்தல் செயல்முறை வெறுமனே மாணவர்களிடத்தில் அறிதலாட்சியை விருத்தி செய்வது மட்டுமல்ல மாறாக கற்பித்தல்

* மற்றவர்களுடன் இணைந்து செயலாற்றல்.
* மற்றவர்களின் நோக்கங்களை மத்தியில்
* தாமாக முன்வந்து செயலாற்றல்.
* ஊக்கலையும் இரசனையையும் தம்மில் மேம்படுத்தல்.

போன்றன எழுச்சியாட்சியுடனும் தொடர்புபட்டதாகும்.

இதற்கமைவாக கற்பித்தலானது மாணவரில் அறிதலாட்சியில் மட்டுமன்றி நழுச்சியாட்சியிலும் செல்வாக்குச் செலுத்த வேண்டும்.

**முகாமைத்துவத்தின் முக்கிய கோட்பாடு**

நாளாந்த வாழ்க்கையில் தனிப்பட்டவர்கள் தாம் விரும்பியோ, விரும்பாமலோ குறித்த சில முறைகளில் தாம் நடந்து கொள்வதற்கான தெரிவை செய்து கொள்கின்றனர். இதற்கான உரிமையும், சுதந்திரமும் இத்தனி நபர்களிடமே உள்ளன. இதனால் தனிப்பட்டவர்களை அவர்தம் நடத்தையை மாற்றிக் கொள்வதற்காக மற்றவர்கள் வற்புறுத்த முடியாது. இக்கோட்பாட்டின்படி பார்த்தால், தனிநபர்களைக் கற்கவோ அல்லது பொருத்தமான நடத்தைக் கோலத்தை வெளிப்படுத்தவோ ஏனையவர்கள் வற்புறுத்த முடியாது. இதனை ஏற்றுக் கொண்டால் ஆசிரியர்கள் வேறு வகையில் செல்வாக்குச் செலுத்துவதன் மூலமேயன்றி, வற்புறுத்து வதன் மூலம் மாணவரின் நடத்தையில் மாற்றத்தைக் கொண்டுவர முடியாது.

இக்கோட்பாட்டின் அடிப்படையில் ஆசிரியர், மாணவர்களில் ஏற்படுத்த விளைகின்ற நடத்தை மாற்றத்தை முதலில் தமது நடத்தையில் கட்டுப்பாடு, பொருத்தமான மாற்றங்கள் என்பவற்றை ஏற்படுத்துவதன் மூலம் மாணவர் நடத்தையில் செல்வாக்குச் செலுத்த முடியும். இதற்காக ஆசிரியர்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* மாணவர் நடத்தையை தொடர்ச்சியாக அவதானிக்க வேண்டும்.

* மாணவர் பிறழ்வான நடத்தைகளை வெளிக் காட்டும் போது தமது நடத்தையில் மாற்றங் களை செய்வதன் மூலம் மாணவர் நடத்தையில் செல்வாக்குச் செலுத்த முனைவார்.

* இதற்காக ஆசிரியர் தொழில் பயிற்சியின் போது கற்ற உளவியல், கற்பித்தல் நுட்பங்கள், கல்விக் கோட்பாடுகள், கல்வி வழிகாட்டல் ஆலோசனை கூறலும் போன்ற பல்வேறு தொழில்சார் ஆற்றல்களை பயன்படுத்திக் கொள்வார்.

மேலே விளக்கப்பட்ட கோட் பாட்டின் அடிப்படையில் கற்பித்தல் பின்வரு மாறு வரைவிலக்கணம் செய்யப்படுகின்றது.

"கற்றல் கோட்பாடுகள், பிள்ளை விருத்தி கொள்கைகள் என்பவற்றில் அத்தி வாரமிடப்பட்டதும் போதனை வழங்கல், வகுப்பறை முகாமைத்துவம் என்பவற்றை நோக்கி நெறிப்படுத்தப்பட்டதும் மாணவர் நடத்தையில் சாதகமான மாற்றத்தை விளை விக்கத் தக்கதுமான முன்திட்டமிடப்பட்ட நடத்தைகளைப் பயன்படுத்துதலே கற்பித்த லாகும்."

இவ்வரைவிலக்கணத்தில் உள்ளடங் கும் முக்கியமான மூன்று அம்சங்கள்:

1. கற்பித்தல் ஆசிரியரின் நடத்தை யுடன் சம்பந்தப்பட்ட ஒரு செயற்பாடாகும். இந்நடத்தை முன்திட்டமிடப்பட வேண்டிய தாகும்.

2. இத்திட்டமிடப்பட்ட நடத்தை யானது ஆசிரியரின் தொழில்வாண்மை அறிவினாற் தீர்மானிக்கப்படும். இவ்வறிவு பொருத்தமான நடத்தைக் கோலங்களை தீர்மானிக்க உதவுகின்றன.

3. பல்வேறு கற்பித்தல் நடத்தைகள் ஆசிரியரின் தொழில் வாண்மை அறிவில் அத்திவாரங்களைக் கொண்டுள்ளன. இப்பல் வேறு நடத்தைகளில் இருந்து மாணவர்களின் நடத்தைகளில் சாதகமான விளைவை ஏற்படுத் தும் பொருத்தமான கற்பித்தல் நடத்தையை ஆசிரியர் தேர்ந்தெடுத்து கற்பித்தலின்போது பிரயோகிக்க வேண்டும்.

4. ஆசிரியர் தன் நடத்தையில் ஏற்படுத்தும் மாற்றங்கள் மாணவர் நடத்தையி லும் மாற்றங்களை உண்டாக்கும், இதனால்,

* முந்திய நடத்தை "தாக்கும் நடத்தை (Affecting behavior)" எனவும்

* மாணவரிடத்தில் ஏற்படுத்த விளையும் நடத்தையை "இலக்கு நடத்தை (target behavior)" எனவும்

ஆசிரியர் கற்பித்தல் நடத்தையை வேறுபடுத்தி நோக்கலாம்.

**வகுப்பறை முகாமைத்துவத்திற்கான தத்துவ அணுகுமுறைகள்**

*1. ஆசிரியரின் அதிகாரங்கள்*
(Teacher Power Base)

பிரன்ச், ரவன்(French and Rayan, 1960) என்போர் சமூக முகவர் என்ற வகையில் ஆசிரியர் பயன்படுத்தக்கூடிய ஐந்து வகை யான அதிகார பலங்களை இனங் கண்டுள் ளனர். விளைதிறனுள்ள ஆசிரியர் ஒருவர் மாணவர் நடத்தையை கட்டுப்படுத்த எத்தகைய அதிகார பலத்தை எப்போது பயன் படுத்த வேண்டும் என்பதை அறிவார். அத்துடன் தான் பயன்படுத்தும் ஏனைய நுட்பங்களினுள் மறைந்து கிடக்கும் அதிகார பலங்களையும் அவரால் இனங்கான முடியும்.

2. தொடர்பு சார் அதிகாரபலம் (Referent Power)

ஆசிரியருக்கு இவ் அதிகார பலம் இருந்தால் மாணவர்கள் அவரை தமது நலனிலும் கல்வியிலும் அக்கறையுள்ள ஒரு மனிதராக முதலில் அடையாளங் காண் கின்றார்கள். இதனால், அவரின் விருப்பத் திற்கு மாறாக நடக்க அவர்கள் துணிவ தில்லை. இவ்வாறான உறவை மாணவர்களில் ஏற்படுத்திக்கொண்ட ஆசிரியர் ஒருவர் குறிப்பிட்டவகையில் நடந்து கொள்ளுமாறு நேரடியாகவே கேட்டுக்கொள்ள முடியும். மாணவர்களும் அவ்வாறே செய்வர்.

*3. நிபுணத்துவ அதிகாரபலம்* (Expert Power)

மாணவர்கள் ஆசிரியரை பாடத்தில் நிபுணத்துவம் மிக்கவராக இனம் காணும் போது, ஆசிரியரின் விருப்புக்கமைய தமது நடத்தைகளை அமைத்துக் கொள்கின்றனர். ஆசிரியர்கள் உண்மையிலேயே தமத கற்றலுக்கு பெரிதும் உதவுகின்றனர் என மாணவர்கள் நம்புகின்றனர். இது தொழில் தொழில்வாய்மை ஆற்றலால் கிடைக்கும் அதிகார பலமாகும். நிபுணத்துவ அதிகார பலம் இருப்பதற்கு முக்கியமான இரண்டு நிபந் தனைகள் திருப்தி செய்யப்படல் வேண்டும். முதலில் ஆசிரியரிடம் பாட ஞானமும், கற்பித் தல் நிபுணத்துவமும் இருப்ப தாக மாண வர்கள் இனங்காணல் வேண்டும். இரண்டா வது ஆசிரியர் கற்பிக்கும் பாடத்தின் பெறு மதியை மாணவர் உணர்ந்திருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு காரணங்களிற்காக மாணவன் ஒருவன் பாடம் ஒன்றினை பெறுமதி மிக்கதாக கருதலாம். பாட உள்ளடக்கம் இயல்பாகவே இரசனைக்கு உரியதாகவும், உண்மையில் உலகில் இவற்றைப் பயன் படுத்தக் கூடியதாகவும் இருந்தால் இப் படத்தில் மாணவர்கள் உயர் பெறுபேற்றை அடைய ஆவலுடன் இருப்பார். தொழில் போன்ற சுயக்காரணத்தினாலும் படம் பெறுமதியுள்ளதாகக் கருதப்படலாம். எவ்வாறாயினும், மாணவன் குறித்த பாடத்தைப் பெறுமதியுள்ளதாகக் காணா விட்டால் நிபுணத்துவ அதிகாரப்பலம் வேலை செய்யாது. ஆசிரியர் நிபுணத்துவ அதிகாரபலத்தை வெற்றிகரமாக பிர யோகித்தால் பின்வரும் துலங்கல்கள் மாணவர்களிடமிருந்து வெளியாவதைக் காணலாம். "அவர் உண்மையிலேயே நல்ல ஆசிரியர்", "அவர் விஞ்ஞானத்தை இரசனை யுள்ள பாடமாக்கிவிட்டார்" "அவர் எனக்குக் கற்க வேண்டும் என்ற உணர்வைத் தூண்டி விட்டார்."

4. சட்டரீதியான அதிகாரபலம்
**(Legitimate Power)**

தான் பொறுப்புக்களை ஏற்றுள்ளதை யும், பதவி வழியாக அதிகார பலத்தைப் பெற்றுள்ளதையும் ஆசிரியர் தனது நடத்தை மூலம் வெளிக்காட்ட வேண்டும். சட்ட ரீதியான அதிகாரபலத்தை ஆசிரியர் பயன் படுத்த விரும்பினால் மாணவர்கள் அவரை அதற்கேற்றவாறான உடைநடை பாவனையில் பார்க்கத்தக்கதாக இருக்க வேண்டும். மாணவர்கள் ஆசிரியரை அதிகாரபலம் உடையவராகப் பார்க்க வேண்டுமானால், ஆசிரியரும் பாடசாலை நிருவாகத்தினரும் ஒன்றித்து இயங்குவதாக மாணவர்கள் புலக்காட்சி பெற வேண்டும். அத்துடன் பாடசாலை நிர்வாகம் சொல்லாலும், செய லாலும் மாணவர்களிடம் ஆசிரியர்கள் அதி காரபலம் உடையவர்கள் என்றும், அதை ஏற்றுப் பிள்ளைகள் நடக்க வேண்டும் என்றும் வெளிக்காட்டல் வேண்டும். ஆசிரியர்கள் பாடசாலைச் சட்டதிட்டங்களை மதித்து நடப் பதுடன் அவற்றைக் கட்டாயமாக அமுல் படுத்துவதன் மூலம் தமது அதிகாரபலத்தை வெளிகாட்டலாம்.

5. வெகுமதி - வற்புறுத்தும் அதிகாரபலம்
**(Reward/Coercive Power)**

இந்த ஆசிரியர் மாணவர் மீது செல்வாக்குச் செலுத்துவதற்கு வெகுமதி, வற்புறுத்தல் என்னும் இரண்டு அதிகார பலங்களையும் பயன்படுத்தியுள்ளார். இவையிரண்டும் வித்தியாசமான இரண்டு அதிகாரபலங்களாகத் தெரிந்தாலும் அவை யிரண்டும் நாணயம் ஒன்றின் இரு பக்கங் களைப் போன்றிருப்பதனால், ஒரே நேரத்தில் இங்கு கலந்துரையாடப் படுகின்றன. இவையிரண்டும் ஒரே விதமான பிரயோகக் கோட்பாட்டைக் கொண்டுள்ளன. இவ்வதிகார பலத்தின் அடிப்படையில் செயற்படும் ஆசிரியர் ஒருவர் பொருத்தமான மாணவர் நடத்தையை ஏற்படுத்த வெகுமதியையும் பிழையான நடத்தையைத் தவிர்க்க தண்டனையையும் வழங்குகின்றார்.

**வகுப்பறை முகாமைத்துவக் கோட்பாடுகள்**

1.தலையிடாக் கொள்ளையாளர்
**(Noninterventionist)**

தலையிடாக் கொள்கையானது உளவியல் மற்றும் தத்துவங்களை அடிப்படை யாகக் கொண்டு மாணவர் மையமாக அல்லது மானிடத் தன்மையை மையமாகக் கொண்டுள்ளது எனலாம். இக்கொள்கையின் அடிப்படை என்னவென்றால் தம் நடத்தை யைக் கட்டுபடுத்துவதற்கான பிரதான பொறுப்பை மாணவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும். தமது நடத்தையை அவர்களால் கட்டுபடுத்தலாம் என்று இங்கு நம்புவதனால், அதற்கான வாய்ப்புக்கள் அவர்களுக்கு வழங்கப்படல் வேண்டும். அப்போது அவர் கள் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்வார்கள். எனவே, ஆசிரியரின் பிரதான பணி அதற்கான வகுப்பறைச் சூழலை அமைத்துக் கொடுப்ப தாகும். ஆசிரியரின் வழிகாட்டலின் கீழ் தம் நடத்தையைக் கட்டுபடுத்துவதற்குத் தேவையான வழிகாட்டுதல் குறிகளை மாணவர்களே அமைத்தல் வேண்டும்.

தலையிடாக் கொள்கையாளர்கள் நடத்தையொன்றை எண்ணங்களினதும், உணர்வுகளினதும் வெளிப்பாடாகக் கருது கின்றனர். வெளிப்படையாகத் தோன்றும் நடத்தையைக் கட்டுப்படுத்தல் அவசிய மாயினும் வகுப்பறை ஒழுங்குப் பிரச்சினை யைக் கையாள்வதற்கு அது போதியதன்று. முழுமையான தீர்வு காணப்பட வேண்டு மானால் மாணவர்கள் தமது எண்ணங்கள், உணர்வுகள் என்பவைகளைச் சீர்ப்படுத்த ஆசிரியர் உதவுதல் வேண்டும். ஒவ்வொரு மாணவனதும் தனியாள் விருப்பு வெறுப்புக் களை, அவர்களைத் தனியாகச் செவ்வி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்பதன் மூலம் இனங்காணுதல் வேண்டும். அவர்களின் தேவைகள் இனங் காணப்படல் முக்கியமாகும். வகுப்பறைப் பிரச்சினை களைக் கையாள்கையில் மாணவர்களின் தனியாள் வேறுபாடுகளுக்கு முக்கியத்துவம் அளித்தல் அவசியமாகும்.

தலையிடாக் கொள்கையை உண்மை யிலேயே வகுப்பறை முகாமைத்துவத்திற்குப் பயன்படுத்த விரும்பினால், மாணவர்கள் தமது நடத்தையை தாங்களே ஒழுங் கமைத்துக் கொள்ளக் கூடியவர்கள் என்பதை முதலில் நம்ப வேண்டும். அதிகமான ஆசிரியர்கள் தலையிடாக் கொள்கையைப் பின்பற்றுவ தில்லை. ஆதலினால் மாணவர்கள் தம் நடத்தையைத் திருத்திக் கொள்வதற்கு அவகாசம் வழங்கப்படுவதில்லை. தமது பிழையான நடத்தைகள் ஆசிரியர்களினால் உடனடியாகக் கவனிக்கப்படாதவிடத்து அவை மன்னிக்கப்பட்டு விட்டதாக அல்லது பாராமுகமாக விடப்பட்டு விட்டதாக மாணவர்கள் எண்ணுவதற்கு இடமுண்டு. இதனால், ஆசிரியர், மாணவர் நடத்தை தொடர்பான தனது நம்பிக்கைகள் எதிர் பார்க்கைகள் போன்றவற்றை வருட ஆரம்பத் திலேயே மாணவர்களுக்கு விளக்குதல் வேண்டும். லேஸ்லி (Lasley, 1989) கூறுகின்றார்: "மாணவர் தம்மை வழி நடத்தவும் உரிய முதிர்ச்சி பெறவும் தலையிடாக் கொள்கை மிகவும் சிறந்தது. ஆயினும் அதிகமான இடைநிலை மாணவர்கள் இவ்வகைக்குள் பொருந்தி வருகின்றார்கள் இல்லை."

2.செயலெதிர்ச்செயலாளர் (Interaction list)

வகுப்பறை முகாமைத்துவத்தில் செயலெதிர்ச் செயலாளர், மாதிரியுருவானது மாணவர் நடத்தையைக் கட்டுப்படுத்தல், மாணவர், ஆசிரியர் இருவரினதும் கூட்டுப் பொறுப்பாகும் என்பதில் நம்பிக்கை உள்ளது. இக்கொள்கை மாணவர் மைய உளவியற் கோட்பாடுகள், மானிட உளவியல் போன்ற வற்றை ஏற்றுக்கொண்டாலும் வகுப்பறை நிலைமையைக் கருத்திற் கொண்டு தனியாளின் தேவையை விடக் குழுவின் தேவைக்குக் கூடிய முக்கியத்துவம் கொடுத்தல் வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. மாணவர் தனது நடத்தையைக் கட்டுப்படுத்தக் கற்றல் கல்வியின் நீண்டகால இலக்குகளில் ஒன்றாக இருப்பதினால், அதற்கான சந்தர்ப்பத்தினை அவர்களுக்கு வழங்குதல் வேண்டும். மேலும், வகுப்பறை என்பது குழுக் கற்றலுக்கான ஒரு நிலைமை என்பதினால் ஆசிரியரும் மாணவர் களின் கட்டுப்பாட்டிற்கான பகுதிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

3.தலையிடும் கொள்கையாளர் (Interventionist)

திரு.நாதன்குமாரின் பிரச்சினையில் கையாண்ட முறை தலையிடும் கொள்கை வாதிகளின் கருத்துக்களை எமக்கு விளக்கு கின்றது. குமாரின் பிழையான நடத்தைகளை நிறுத்த அவர் விரைவாகச் சென்றமை, வகுப் பறைச் சட்டத்திட்டங்களை வற்புறுத்தி யமை, ஓய்வெடுத்துக் கொள்ளும் தனி யுரிமையைத் தண்டனையை இரத்து செய்தமை, நீலநிற அட்டைகளை வெகுமதிக் காக பயன் படுத்தியமை, பெற்றோருக்கான நல்ல செய்திக் குறிப்பை மறுத்தமை போன்றன அவரின் தலையிடும் கொள்கையை எடுத்துக் காட்டு கின்றன.

வகுப்பறை முகாமைத்துவத்தில் பயன்படுத்தப்படும் தலையிடும் கொள்கை யானது நடத்தைவாத உளவியலை அடி யொற்றி அமைந்துள்ளது. இதன்படி, வகுப்பறையில் மாணவரின் நடத்தையை கட்டுப்படுத்தும் பிரதான பொறுப்பு ஆசிரியருக்கே உண்டு. மாணவரின் பொறுத்த மான நடத்தையை ஆசிரியரே உறுதிப்படுத்த வேண்டும். சிறந்த வகுப்பறை ஒழுங்கிற்கான பிரதான அடிப்படை என்னவென்றால் சரி யான வகையில் மாணவர் நடந்து கொள்வ தற்கான வகுப்பறைச் சூழலை ஆசிரியர் அமைத்தலாகும். நடத்தைகளின் முதன்மை யான ஊக்கியாக சூழல் கருதப்படுகின்றது. வகுப்பறைக்கான சட்ட திட்டங்களையும், வழிகாட்டல்களையும் ஆசிரியரே அமைத்து தனது எதிர்பார்ப்புக்களை மாணவர்கள் தெளிவாக அறிந்துள்ளதை உறுதிப்படுத்திக் கொள்வார். அதைத் தொடர்ந்து வெகுமதி - வற்புறுத்தல் அதிகாரப்பலத்தினைப் பயன் படுத்தி தயாரிக்கப்பட்ட சட்டத்திட்டங் களுக்கு மாணவர்கள் பணிந்து நடப்பதை உறுதிப்படுத்திக் கொள்வார். மாணவர்களின் நடத்தைகளின் ஆசிரியர்ன் செல்வாக்கை இக்கொள்கை வற்புறுத்துவதினால் மேற் கூறிய அதிகாரபலங்கள் இக்கொள்கைக்கு மிகவும் பொருத்தமானவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அறிமுகம்**

"ஒரு காலத்தில் ஆசிரியர்கள் அறிவின் களஞ்சிய சாலைகளாக கருதப்பட்டனர். ஆனால் தற்காலத்தில் அவ்வாறன்று. ஒரு மிகச் சிறந்த ஆசிரியர், மாணவர் களது அறிவினை மேலும் பெருகச் செய்பவராக இருப்பதுடன், மாணவர்களுக்கு எங்கிருந்தாலும் உதவி செய்பவராகவும் காணப்படுவார்."(சிவ்நாடார் எனும் இந்தியரின் பிரபலமான கூற்று)"

இன்றைய பின்நவீனத்துவ காலத்தில், ஆசிரியர் கொண்டிருக்க வேண்டிய வகிபாகங் களில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆசிரியர் தனது கற்றல் கற்பித்தல் நடவடிக்கை களை வெற்றிகரமாக்கி கொள்வதற்கு விரைந்து மாறி வரும் கல்வி உலகிற்கு ஏற்ப தன்னை தயார்படுத்திக் கொள்வது இன்றியமையாதது. மாணவரது கற்றலை மேலும் விருத்தி செய்யும் வகையில் ஓர் இலகுபடுத்துபவராக அல்லது சாத்தியப்படுத்துபராகவே தற்கால ஆசிரியர் கள் நோக்கப்படுகின்றனர். இதன் பொருட்டு, ஆசிரியர்கள் தம் பணியான கற்றல் கற்பித்தல் செயன்முறையில் சிறந்து விளங்க அவர்கள் பல்வேறு அறிவுகள், திறன்களை கொண்டி ருக்க வேண்டியுள்ளது. அந்தவகையில் வினைத்திறன் மிகுந்த கற்றல் கற்பித்தலில் ஆசிரியர் கொண்டிருக்க வேண்டிய பல்வேறு அறிவுகள் பற்றியும், சிறந்த கற்றல் கற்பித்தலில் சுல்மான் என்பவரது போதனா சார் உள்ளடக்க அறிவு எண்ணக்கருவின் செல்வாக்கு பற்றியும் இக்கட்டுரையில் எடுத்து நோக்கப்படுகிறது.

**வினைத்திறன்மிகு கற்றல் கற்பித்தல்**

கற்பித்தல் என்பது ஒரு சிக்கலான அறிகைசார் செயன்முறையாகும். ஏனெனில், வகுப்பறையில் உள்ள சகல மாணவர்களுக்கும் ஒரே விதமாக கற்பித்து விட்டு செல்ல முடியாது. வகுப்பறையில் உள்ள மாணவர்கள் அனைவரையும் ஒரே நோக்கில் நோக்கவும் முடிவதில்லை. அவர்கள் எண்ணிக்கையில் மட்டுமன்றி அவர்களது கற்றல் தேவைகளிலும் பல்வகைப்பட்டவர்கள். இதனால் வகுப்பில் உள்ள அனைவருக்கும் ஒரே விதமான கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள் செல்லுபடியாகு வதில்லை. மாணவர்களது பல்வேறு கற்றல் தேவைகளை அறிந்து, அவற்றுக்கேற்ற பல் வேறு கற்றல் கற்பித்தல் உத்திகள், நுட்பங் களை ஒருங்கிணைத்து கற்பிக்க வேண்டி யுள்ளது. இவ்வாறு கற்பிக்கும் போதே வினைத்திறன் மிகு கற்பித்தலுக்கான பாதை அங்கு திறக்கப்படுகின்றது. ஆசிரியர்கள் தமது கற்றல் கற்பித்தலினை வினைத்திறன் மிக்கதாக்கி கொள்வதற்கு பின்வரும் பிரதான விடயங்களில் தேர்ச்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும் என Santrock (2018) கருதுகிறார்:

- வாண்மைசார் அறிவு மற்றும் திறன்கள்
- அர்ப்பணிப்பு, ஊக்கல், பராமரிப்பு, பாதுகாப்பு

மேலும், ஆசிரியர்கள், தமது பணியை வினைத்திறன்மிக்கதாக்கி கொள்வதற்கு பின்வரும் ஆசிரிய வாண்மைசார் அறிவு மற்றும் திறன்களினை பெற்றவர்களாக இருக்க வேண்டும் எனவும் Santrock (2018) சுட்டிக்காட்டுகிறார்:

- பாட விடயம் தொடர்பான தேர்ச்சி
- கற்பித்தல் உத்திகள் தொடர்பான அறிவும் திறன்களும்
- இலக்கு நிர்ணயிப்பும் கற்பித்தல் திட்டமிடலும்
- பிள்ளை விருத்தி மட்டங்களுக்கு பொருத்தமான வகையில் கற்பித்தல் பிரயோகங்கள்
- வகுப்பறை முகாமைத்துவத் திறன்கள்
- ஊக்கல் திறன்கள்
- தொடர்பாடல் திறன்கள்
- மாணவரது தனியாள் வேறுபாடுகள் தொடர்பான அக்கறை
- பல்கலாசார பின்னணி கொண்ட வகுப்பறையில் மாணவர்களை சிறந்த முறையில் கையாளுதல்

# வினைத்திறன்மிகு கற்பித்தலும் சுல்மானின் ஆசிரியர்களுக்கான போதனா சார் உள்ளடக்க அறிவு எண்ணக்கருவும்

கலாநிதி ப.மு.நவாஸ்தீன்

விரிவுரையாளர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கணிப்பீடு தொடர்பான அறிவும் திறன்களும்
- தொழினுட்பத் திறன்கள்

இதே போன்றதொரு விடயத்தை Shulman (1987), என்பவரும் குறிப்பிட்டுள்ளதை காணமுடிகின்றது. அதாவது வினைத்திறமிக்க ஆசிரியர் பின்வரும் ஏழு அறிவுப் பகுப்புக் களை கொண்டிருக்க வேண்டும் என சுல்மான் குறிப்பிட்டுள்ளார்.

- (பாட) உள்ளடக்க அறிவு
- பொதுக் கற்பித்தல் அறிவு
- கலைத்திட்டம் தொடர்பான அறிவு
- போதனைசார் (கற்பித்தல்) உள்ளடக்க அறிவு
- மாணவர்கள் மற்றும் அவர்களது குணவியல்புகள் பற்றிய அறிவு
- கல்விச் சூழமைவுகள் பற்றிய அறிவு
- கல்வியின் இறுதி பேறுகள் (முடிவு நிலை) தொடர்பான அறிவு

மேற்கண்ட இருவரது கருத்துக்களை தொகுத்து நோக்கும் போது, ஆசிரியர்கள் தமது கற்பித்தல் பணியில் சிறந்து விளங்க கற்பிக்கப் போகும் பாட விடயத்தில் ஆழமான புரிதலை கொண்டிருப்பது மட்டுமன்றி அவற்றை மாணவர்களுக்கு எங்கு, எவ்வாறு கற்பிக்க வேண்டும் என்பது தொடர்பான அறிவுகளை கொண்டிருப்பது அவசியம் என புலனாகின்றது.

**நிபுணத்துவ அறிவும் போதனைசார் (கற்பித்தல்) உள்ளடக்க அறிவும்**

சிறந்த ஆசிரியர் தாம் கற்பிக்கும் பாட விடயம் தொடர்பாகக் கொண்டுள்ள அறிவு நிபுணத்துவ அறிவு (Expert Knowledge) எனப்படுகிறது. அதாவது விஞ்ஞானம் அல்லது தமிழ் மொழி கற்பிக்கும் ஆசிரியர் அப்பாடவிடயத்தின் உள்ளடக்கங்கள் பற்றிய ஆழ்ந்த அறிவினை கொண்டிருப்பது நிபுணத்துவ அறிவு எனப்படுகிறது. ஒருவர் தான் கற்பிக்கப் போகும் பாட உள்ளடக்கங் களைக் குறிப்பாக அவற்றின் மைய எண்ணக் கருக்களை விளங்கிக் கொள்ளாது மாணவர் களுக்கு கற்பிக்க முடியாது. ஆயினும் பாட விடய உள்ளடக்க அறிவு மாத்திரம் மாணவர் களுக்கு சிறந்த முறையில் கற்பிக்க துணை போவதில்லை. மாறாக அப்பாட விடயங்களை பொருத்தமான கற்றல் கற்பித்தல் முறைகள், நுட்பங்களின் உதவியுடன் கற்பிக்க வேண்டிய தேவை ஆசிரியர்களுக்கு உண்டு. இதனையே Shulman போதனாசார் உள்ளடக்க அறிவு என அடையாளப்படுத்துகிறார்.

**சுல்மானின் போதனாசார் உள்ளடக்க அறிவு எண்ணக்கரு**

ஆசிரியர்கள் கற்பிக்கும் பாடங்கள் பற்றிய அறிவு, அவற்றை கற்பிக்கும் முறைகள் பற்றிய அறிவு ஆகியவற்றை ஒன்றிணைத்த வகையில் Shulman (1987) ஓர் எண்ணக்கருவை முன்வைத்து இருந்தார். அதுவே போதனாசார் உள்ளடக்க அறிவு எனப்படுகிறது. ஆசிரியர் கள் பாடங்களை கற்பிக்கும் போது அப் பாடங்களுடன் தொடர்புபட்ட வகையில் ஆசிரியர்களிடம் உள்ள குணவியல்புகள், கற்பித்தல் முறைகள் என்பன ஆசிரியர்கல்வி தொடர்பான ஆய்வுகளில் தவறவிடப் பட்டுள்ளதாக சுல்மான் கருதியதன் விளைவாக ஆசிரியர்களிடம் காணப்பட வேண்டிய பாட உள்ளடக்க அறிவு. போதனாசார் உள்ளடக்க அறிவு ஆகிய எண்ணக்கருக்கள் பற்றிய விளக்கங்கள் வெளிவரத் தொடங்கின.

போதனாசார் உள்ளடக்க அறிவு இரண்டு விதமான அறிவுகள் ஒன்றிணையும் போது உருவாகும் அறிவாக உள்ளது. பாட உள்ளடக்க அறிவு மற்றும் போதனா அறிவு அல்லது கற்பித்தல் தொடர்பான அறிவு என்பனவே அவைகள் ஆகும்.




உள்ளடக்க அறிவு என்பது, ஆசிரியர் கற்பிக்கும் பாடத்தினைப் பற்றிய அவரது ஆழமான புரிதலை குறித்துக் காட்டுகின்றது. இதில் ஒரு பாட விடயத்தை அது எத்தகையது என்று அறிந்து இருப்பதுடன் அது ஏன் அவ்வாறு காணப்படுகிறது என்பதான ஓர் ஆழமான விளக்கத்தினை இது குறித்து நிற்கின்றது.

போதனா அறிவு அல்லது கற்பித்தல் அறிவு என்பது பல்வேறு கற்றல் கற்பித்தல் முறைகள், வகுப்பறை முகாமைத்துவம், கணிப்பீடும் மதிப்பீடும், பாடவேளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டமிடல், மாணவர் எவ்வாறு கற்கின்றனர் என்பது போன்ற இன்னோரன்ன விடயங்களில் அறிவு கொண்டிருப்பதனைக் குறிகின்றது.

இவ்விரு அறிவுகளும் ஆசிரியர்களுக்கு முக்கியமாகின்றது. அதாவது போதனா உள்ளடக்க அறிவு வினைத்திறன் மிக்க ஆசிரியர்களுக்கு மிகவும் தேவையான அறிவாக விளங்குகின்றது. Shulman,(1986), குறிப்பிடுவதற்கமைய போதனைசார் உள்ளடக்க அறிவு என்பது மிக உயர்வாகக் கட்டமைக்கப்பட்ட வகுப்பறை ஒழுங்கமைப்பில் தமது செயற்பாடுகளை வழிப்படுத்திக் கொள்வதற்காக ஆசிரியர்களால் பயன்படுத்தப்படும் ஒருவகையான செயற்பாட்டு ரீதியான அறிவு ஆகும். இவ்வகை அறிவு மேலும் சில விடயங்களுடன் தொடர்புபடுகிறது.

- மாணவர்களுக்கு நேரடியாகக் கற்பிப்பதற்காகப் பாட உள்ளடக்கத்தைக் கட்டமைத்துக் கொள்வது எவ்வாறு என்பது பற்றிய அறிவு.
- குறித்த பாட உள்ளடக்கத்தைக் கற்கும் போது மாணவர்கள் மத்தியில் எழக்கூடிய பொதுவான மற்றும் தவறான எண்ணக் கருக்களும் பிரச்சினைகளும் எவ்வாறானவை என்பது பற்றிய அறிவு.
- குறித்த வகுப்பறைக் கவின் நிலைக்கமைய மாணவரது கற்றல் தேவைக் கேற்ப எவ்வகையான கற்பித்தல் உத்திகளைப் பயன்படுத்தலாம் என்பது பற்றிய அறிவு.

இவ்வாறு நோக்குகையில் போதனை சார் உள்ளடக்க அறிவு எனும் சொல்லானது எவ்வாறு கற்பிப்பது? எதனைக் கற்பிப்பது? எப்படிக் கற்பிப்பது? போன்ற விடயங்களை உள்ளடக்கியிருப்பதைக் காணலாம். இது ஆசிரியர் கல்வியில் தனித்துவமான ஒரு ஆட்சிப் புலத்தைப் (Domain) பிரதிநிதித்துவம் செய்கிறது. போதனைசார் உள்ளடக்க அறிவு என்பது,

"தன்னால் கற்பிக்கப்படும் ஒரு பாட விடயத்திலுள்ள அம்சங்களை மாணவர்கள் சிறப்பாக உள்வாங்கிக் கொள்ளலை ஊக்குவிக்கும் விதத்தில், மாணவர்கள் குறித்த பாடம் தொடர்பாக எவ்வாறான ஒரு கிரகித்தலைப் பெற்றுக்கொள்வார்கள் என்பது பற்றிய அறிவுடன் இ தன்னால் கையாளப்படும் கற்பித்தல் உத்திகள் மற்றும் தொழிநுட்பங்களுக்கு அப்பால் ஓர் ஆசிரியர்இ தனது கற்பித்தல் தொடர்பாகச் சிந்தனை செய்யும் விதமாகும்" என அடையாளப்படுத்தலாம். சுல்மானின் கற்கையைத் தொடர்ந்து Grossman,(1990) Magnusson (1999) ஆகியோரும் போதனைசார் உள்ளடக்க அறிவு தொடர்பாக பல்வேறு விளக்கங்களை முன்வைத்துள்ளனர்.

## முடிவுரை

வினைத்திறன் மிக்க ஆசிரியர்களாக திகழ வேண்டுமெனில், முக்கியமான பல அறிவுகளையும் திறன்களையும் ஆசிரியர்கள் கொண்டிருப்பது அவசியம். அவற்றில் போதனாசார் உள்ளடக்க அறிவும் ஒன்றாக உள்ளது. ஆசிரியர் தான் கற்பிக்கும் பாட விடயங்களைப் பற்றிய ஆழமான புரிதல்களை கொண்டிருப்பதுடன் அவற்றை எங்கு எவ்வாறு கற்பிப்பது என்ற விடயங்களிலும் தேர்ச்சி பெற்றவராக இருக்க வேண்டும். இதற்காக ஆசிரியர்கள் தொடர்ச்சியான கற்றலிலும் பயிற்சிகளிலும் ஈடுபடுவது முக்கியமாகின்றது.

## உசாத்துணைகள்


Kleickmann, Thilo & Richter, Dirk & Kunter, Mareike & Elsner, Juergen & Besser, Michael & Krauss, Stefan & Baumert, Jürgen. (2012). Teachers'

Content Knowledge and Pedagogical Content Knowledge: The Role of Structural Differences in Teacher Education. Journal of Teacher Education. 64. 90-106. 10.1177/0022487112460398.

Halim, L., & Meraah, S. M. (2002). Science trainee teachers' pedagogical content knowledge and its influence on physics teaching. Research in Science & Technological Education, 20, 215-225. doi:10.1080/0263514022000030462

Santrock (2018) Educational Psychology: Theory and Application to Fitness and Performance, Sixth Edition, McGraw-Hill Education

Shulman, L. S. (1986). Those who understand: Knowledge growth in teaching. Educational Researcher, 15(2), 4-14. doi:10.3102/0013189X015002004

Shulman, L. S. (1987). Knowledge and teaching: Foundations of the new reform. Harvard Educational Review, 57(1), 1-22.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரணீ புத்தகக்கூடம்

# பரணீ அச்சகம்

நெல்லியடி ம.ம.வீதி.

நெல்லியடி

0775991949

**புத்தகங்கள்**

**கல்வெட்டுக்கள்**

**அழைப்பிதழ்கள்**

**பயிற்சி வினாத்தாள்கள்**



**எம்மால் அச்சிடப்பட்டுத் தரப்படும்**

**பாடசாலை, உபகரணங்கள், பாடப்புத்தகங்கள்**

**பெற்றுக்கொள்ள நாட வேண்டிய இடம்**


**கடல் முதல் 18 இதழ்களின் தொகுப்பு**

**உளவியல் - 66 கட்டுரைகள்**

**ஆசிரியர் கல்வி - 40 கட்டுரைகள்**

**முன் பள்ளி - 13 கட்டுரைகள்**

**ஆற்றுப்படுத்தல் - 16 கட்டுரைகள்**

**ஆய்வு முறையியல் - 5 கட்டுரைகள்**

For **உளவியல் மாணவர்கள்,** Diploma Students,
M.ed students , B.ed students, Teachers

Price 1500/-

இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி க. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org